# சுதந்திரன்

SUTANTIRAN

தொலைபேசி: 23411

விலை சதம் 50

வள்ளுவர் ஆண்டு 2005, வைகாசி 12உ (26-5-74) ஞாயிறு மே26 ஐ;அவ்:3 புத்தகம் 27 இதழ்-39


## சுதந்திரன் அச்சிடப்படும் தாள் விலை மேலும் உயர்வு!

தற்போது சுதந்திரன் அச்சிடப்படும் தாளின் விலையை இழக்கிலங்கைத் தாள் ஆலைக்கூட்டுத்தாபனம் றீம் ஒன்றுக்கு ரூபா 50.00 வீதம் மேலும் உயர்த்தியுள்ளது.

இதுவரை ஒரு றீம் ரூபா 59-95 வீதம் விற்பனை செய்யப்பட்டுவந்த தாள், மே 20ந் திகதி முதல், ஒரு றீம் ரூபா 108-20 ஆக உயர்த்தப்பட்டிருக்கிறது.

# அனுராதபுரம் சிறைச்சாலையில் தமிழ் இளைஞர்கள் அவதி

நீர்கொழும்புச் சிறையிலிருந்து அனுராதபுரம் புதிய சிறைச்சாலைக்கு அண்மையில் மாற்றப்பட்ட தமிழ் இளைஞர்கள் அங்கு பெரும் அவதியுறுவதாகத் தெரிய வருகிறது. அவ்விளைஞர்கள் அங்கு மிகவும் கேவலமான முறையில் இம்சைப் படுத்தப்படுவதாகவும் அறியப்படுகிறது.

அனுராதபுரம் புதிய சிறைச்சாலையில் வைக்கப்பட்டிருக்கும் தமிழ் இளைஞர்கள் அங்கு தம்மைக் காண வந்த உற்றார் பெற்றோரிடம் இது பற்றிக் கூறி உளம் வருந்தினராம்; இதை அவர்கள் தமிழர் கூட்டணித் தலைமைப் பீடத்தின் கவனத்துக்கு கொண்டு வந்துள்ளனர்:

"இந்த இளைஞர்கள் காற்றேயில்லாத இருட்டறையொன்றில் அடைத்து வைக்கப்பட்டிருக்கிறார்கள்; அவர்கள் அங்கு மிகவும் கேவலமான முறையில் இம்சைப் படுத்தப்படுகின்றனர்; பிரதம சிறைச்சாலை ஜெயிலர் மிகவும் துவேஷம் கொண்டவராக இருக்கின்றாராம்; முடிந்தால் தனக்கு கறுப்புக் கொடி காட்டுமாறு கேலி செய்கின்றாராம்!

"அடிக்கடி, இது யாழ்ப்பாணம் அல்ல; அனுராதபுரம் என்பதை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள் என்று இந்த இளைஞர்களிடம் அங்குள்ள ஜெயிலர்கள் கூறி கிண்டல் செய்கின்றனராம்!

"சிறையில் உள்ள தமிழ் இளைஞர்களில் ஒருவர் தொய்வு நோயால் மிகவும் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளாரென்றும், இவரை டாக்டரிடம் காட்டி மருந்தெடுத்துக் கொடுக்கும்படி ஏனைய இளைஞர்கள் விடுத்த கோரிக்கையும் மறுக்கப்பட்டுள்ளதாம்!

"தமக்கு இழைக்கப்படும் அநீதிகளை மேற்படி சிறைச்சாலை சுப்ரின்டென்டனின் கவனத்துக்கு கொண்டுவந்து நிவாரணம் தேடுவதற்கு இந்த இளைஞர்கள் முயற்சிகள் மேற்கொண்ட போதிலும் அவரைச் சந்திப்பதற்கு இடையிலுள்ள குட்டித் தேவதைகள் இதுவரை அனுமதிக்கவில்லையாம்!

"இந்த அநாகரிக காட்டுமிராண்டிச்செயல்கள் நிறுத்தப்படா விட்டால், இறக்கும் வரை உண்ணாவிரதம் மேற்கொள்வது பற்றியும் இந்த இளைஞர்கள் ஆலோசித்து வருகிறார்களாம்"!

— மேற்கண்ட புகார்களை குறித்த தமிழ் இளைஞர்களின் உற்றார் பெற்றோர் தமிழர் கூட்டணித் தலைமைப் பீடத்தின் கவனத்துக்கு கொண்டு வந்துள்ளனர்,

தமிழர் கூட்டணி பா. உக்கள் இது சம்பந்தமாக உடனடி நடவடிக்கை மேற்கொள்ளவிருக்கின்றனர்.

## சட்டத்தை மீறிய எம்மை ஏன் கைது செய்யவில்லை?

### பொலிசாரிடம் செல்வாவின் கேள்வி!

"அவசரகாலச்சட்ட விதிகளை நாம் மீறியும் பொலிசார் எம் மீது நடவடிக்கை எடுக்காதது ஏன்? நாம் செய்யும் அதே செயலை நமது இயக்கத் தொண்டர்கள் செய்யும் போது அவர்களை மட்டும் கைது செய்வது ஏன்? சட்டத்தை அமுல் படுத்துவதில் தலைவர்களுக்கு ஒரு நியாயம் — தொண்டர்களுக்கு ஒரு நியாயமா? ஏன் இந்தப் பாகுபாடு காட்டப்படுகிறது என்று எமக்குப் புரியவில்லை!"

—இவ்வாறு தமிழர் கூட்டணித் தலைவர் தந்தை செல்வா அவர்கள் பத்திரிகைகளுக்கு விடுத்த அறிக்கையொன்றில் குறிப்பிட்டுள்ளார்.

அவசரகாலச் சட்ட விதிகளுக்கு முரணான முறையில் கடந்த திங்கட்கிழமை (20-5-74) குடியரசு தினத்தை பகிஷ்கரிக்கும்படி தமிழ் மக்களுக்கு வேண்டுகோள் விடுக்கும் அரசு நடவடிக்கைகளை கண்டிக்கும் தமிழர் கூட்டணியினால் வெளியிடப்பட்ட துண்டுப் பிரசுரங்களை தந்தை செல்வாவும், மற்றும் கூட்டணி தலைவர்களும், யாழ்ப்பாண வீதிகளில் பொது மக்களுக்கு விநியோகித்தனர்.



இதன் பின்னர் தந்தை செல்வா விடுத்த அறிக்கையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார். அவர் அதில் மேலும் கூறியிருப்பதாவது:—

"கடந்தவாரம், பலதமிழ் வாலிபர்களை அவர்கள்

(7-ம் பக்கம் பார்க்க)

## இராணுவ அணிவகுப்பு இசையும் சிங்களத்தில்!

இம்மாதம் 22ம் திகதி குடியரசுக் கொண்டாட்டங்களையொட்டி நடைபெற்ற இராணுவ விமானப்படை அணிவகுப்பின்போது முதன்முதலாக சிங்கள இசையும், சிங்களப் பாடலுமே இடம்பெற்றன.

'சிறீலங்கா' குடியரசில் சிங்களத்துக்கும் சிங்களவருக்கும் மட்டுமே இடமுண்டு; தமிழுக்கும் தமிழருக்கும் அதில் இடமில்லையென்பதை உறுதிப்படுத்தும் மற்றோர் நிகழ்ச்சியாக இது கருதப்படுகிறது.

## ஞானப்பிரகாசருக்கும் இருட்டடிப்பு!

நற்றமிழ் வளர்த்த நல்லூர் சுவாமி ஞானப் பிரகாச அடிகளாரைப்பற்றி இருட்டடிப்பு செய்வதிலும் கல்வி வெளியீட்டுத்திணைக்களம் இறங்கியுள்ளது;

கடந்த வருடங்களில் 6-ம் 7-ம் வகுப்புப் பாடநூல்களாகிய தமிழ், தமிழ் மலர் ஆகிய நூல்களில் சுவாமி ஞானப்பிரகாசர் பற்றிய உரைச்சித்திரம், வாழ்க்கை வரலாறு பற்றிய கட்டுரை என்பன இடம் பெற்றன. ஆனால் 1973ம் ஆண்டு பதிப்பிக்கப்பெற்ற நூல்களில் சுவாமிகள் பற்றிய பாடங்கள் யாவும் நீக்கப்பட்டுள்ளன.

(7ம் பக்கம் பார்க்க)

## 'ஜனவேகத்'துக்கு பதிலடி—

சுதந்திரன் போர்மன் திரு. நாகலிங்கத்தின் விசேட பேட்டியுடன்— உள்ளே!

# தமிழ் ஈழத்தில் பூரண துக்கம்! குடியரசு தினம் பகிஷ்கரிப்பு!

## கொழும்பில் சத்தியாக்கிரகிகள் மீது குண்டாந்தடியடி, கண்ணீர்ப்புகை!

'சிறீலங்கா'வின் இரண்டாவது குடியரசு நாளான மே 22ம் திகதியன்று தமிழ் ஈழமெங்கும் பூரண துக்கம் அனுட்டிக்கப்பட்டது. பல இடங்களில் கறுப்புக் கொடிகள் பறக்க விடப்பட்டன. மக்கள் நடமாட்டமின்றியிருந்ததால் முக்கிய நகரங்கள் தெருக்கள் அனைத்தும் சோபை இழந்து காணப்பட்டன. அரசாங்கம் ஏற்பாடுசெய்திருந்த விழாக்களிலும், பாடசாலைகள் ஏற்பாடு செய்திருந்த விழாக்களிலும் பெரும் பாலான மாணவர்களும் மக்களும் பங்குபற்றாது அவற்றைப் பகிஷ்கரித்தனர்.

இதே வேளையில், கொழும்பு மாநகர சபை மைதானத்தில் எதிர்க்கட்சிகளால் நடத்தப்படவிருந்த சத்தியாக்கிரகத்தில் கலந்து கொள்வதற்காக கூடிய சுமார் 5000க்கு மேற்பட்ட பொது மக்கள் மீது பொலிசார் கண்ணீர்ப்புகை குண்டுகளாலும் குண்டாந்தடிகளாலும் தாக்குதல் நடத்தினர். இத்தாக்குதலின் விளைவாக சுமார் 12 பேர் காயமடைந்

(4-ம் பக்கம் பார்க்க)

## 'அமிர்' மீது விசாரணை; வெளிநாடுகள் அக்கறை!

தமிழரசுக் கட்சித் தலைவரும் தமிழர் கூட்டணி செயலாளர் நாயகமுமாகிய நாவலர் அ. அமிர்தலிங்கம், அண்மையில் 4வது மாடியில் சுமார் நான்கு மணி நேரம் சி. ஐ. டி.யினரால் தடுத்துவைக்கப்பட்டு விசாரிக்கப்பட்டார் அல்லவா? இது தமிழ் மக்கள் மத்தியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

கொழும்பிலுள்ள சில முக்கிய வெளிநாட்டுத் தூதரகங்களும் இதுபற்றி ஆர்வம் காட்டியதுடன், விபரமறிவதற்கு திரு. அமிர்தலிங்கத்துடன் நேரடித் தொடர்புகொண்டதாகத் தெரியவருகிறது.

# தமிழ் இளைஞர்களின் ஆலோசனைகளுக்கும் தமிழர் கூட்டணி செவிமடுக்க வேண்டும்!

இன்று தமிழர் கூட்டணி மிகவும் மந்தமான கதியில் இயங்கிக்கொண்டிருப்பதாக இதனை ஊன்றிக் கவனித்த தமிழ் அபிமானி ஒருவர் இப் பகுதியில் கருத்துத் தெரிவித்திருந்தார். அவருடைய கருத்தை வரவேற்கின்ற அதே சமயத்தில் சில விடயங்களைப்பற்றி ஆராய வேண்டியுமிருக்கிறது.

தமிழ் மொழியை, தமிழ் இனத்தை, தமிழரின் கலை கலாசாரங்களைக் காப்பாற்றுவதற்கு, அவற்றிற்குரிய அந்தஸ்தைப் பெறுவதற்குத் தமிழர் கூட்டணி பாடுபட்டு வருகின்ற தென்பதில் எவ்வித சந்தேகமுமே இல்லை. உலகத்தின் எந்த மூலையிலிருந்து தமிழ்த் தாயின் அலறல் ஒலி கேட்கின்றதோ, அவ்வொலிக்கு விடைகாண, எதிர்க்குரல் கொடுத்துவருகின்ற அமைப்பும் தமிழர் கூட்டணியே. அதே சமயத்தில்......

"இத்திட்டங்கள் தமிழ் மக்களால் குறிப்பாகஎழுச்சி மிகு இளைஞர்களால் ஏற்றுக் கொள்ளப்படக் கூடியதா அல்லது தகுதியற்றதா என ஆராய்ந்து சிந்திக்க வேண்டும். பலரின் கருத்துக்களைக் கேட்க வேண்டும். இதன் பின்னரே அத்திட்டத்தை அமுல் நடத்தலாம்.

"கறுப்புக் கொடிகாட்டும் எதிர்ப்பு முறையானது நாளடைவில் வலுக்குன்றியதற்குக் காரணம் மேற்படிமுறையில் நடவாமையே."

தமிழ் அபிமானி எழுதியிருந்தது போல, திட்டங்கள் பல தீட்டி அவற்றில் ஒரு சிலவற்றிற்காக முழு மூச்சுடன் பாடுபட்டு...வேறு சிலவற்றை நடைமுறைப்படுத்தாது நீண்டநாள் உறங்கி ......மீண்டும் விழித்தெழுந்து ...... பழைய திட்டங்களைத் திரும்பவும் மெருகூட்டிப் பாடுபடுவதுமாயிருந்தால் எம்முடைய இலட்சியத்தை எப்போது நாம் அடைவது?

வீரத்தாய் வழிவந்த எமக்கு, உயிர் நீங்கும் வரையும் விடுதலை உணர்வும் இருக்கும். உறங்குவதும், விழிப்பதுமாய் இருந்தால் விடுதலை பெறுவது எங்ஙனம்?

சர்வாதிகாரி ஹிட்லரின் தாங்கொணாக் கொடுமைகளைக் கண்டு, அவற்றிற்கு அடிபணிந்து யூத மகனொருவன் அன்று வாழ்ந்திருந்தால் இன்று வளங்கொழிக்கும் இஸ்ரவேலைக் காண முடியுமா?

வெந்தணலில் உடலைவேக விட்டும், தூக்கிலிட்டும் மக்களின் உயிரை மாய்த்துவிட்ட ஆட்சிவெறியர்களின் கூட்டத்தைக் கண்டு விடுதலைக் கூட்டம் கலங்கி நின்றால் விடிவு பெற்ற செக்கோஸ்லாவாகியாவைக் காண முடியுமா?

குண்டுபட்டுக் குருதிவெள்ளம் கொப்பளித்துப் பாய்ந்தாலும் அஞ்சி அடிபணியும் கூட்டம் அன்றிருந்தால் அண்ணல் காந்தியின் கீழ் அடிமையற்ற இந்தியாவைக் காண முடியுமா?

எனவே, இன்ப துன்பங்களைக்கண்டு அஞ்சாது எடுத்த ஒரு குறிக்கோளை அடைவதற்கு விடாமுயற்சியுடன் பாடுபட்டதினாலேயே இன்று உலகில் எத்தனையோ நாடுகள் விடுதலை பெற்று மகிழ்ச்சியில் திளைத்துக் கொண்டிருக்கின்றன.

எஸ். கே. எஸ். உதயன்

கூட்டணி இந்நிலையில் மட்டும் முன்னேறி விட்டால் போதாது. வருங்கால நாட்டை வளமுற அமைக்கும் சிற்பிகளான இளைஞர்களின் கருத்துரைகளுக்கும், அவர்களின் ஆக்கபூர்வமான யோசனைகளுக்கும் கூடியளவு முக்கியத்துவம் அளிக்கவேண்டும். வயது முதிர்ந்தவர்களின் கருத்துக்களை மட்டும் அலசி ஆராய்ந்து நடைமுறைப்படுத்த முற்பட்டால், இளைஞர்களின் ஒத்துழைப்புக்கிட்டாது என்பதே எனது நம்பிக்கை.

இறுதியாக நாம் தெரிந்து கொள்ளவேண்டிய விடயமொன்றுண்டு......ஆம்!

எமது சகோதரர்களான தோட்டத்தொழிலாளர்கள் உணவின்றி மடியும் செய்தியறிந்து, கவலைகொண்டு அவர்களுக்குப் பொருளுதவி புரியக் கூட்டணி உறுதிபூண்டது. இச்செய்தி அறிந்தும், அறியாதது போலத் தமிழினம் மௌனம் சாதித்துவிட்டது. தானாகவே உணர்ந்தாவது தன்னலமற்ற சகோதர பணியைத் தமிழ் மகன் நிறைவேற்றினானா? இல்லை ...... இந்நிலையில் நாமே நமக்குள்ளே பேதங்காட்டி நடக்கும் போது, ஒற்றுமையை நிலைநாட்ட மறக்கும் பொழுது, மறுக்கும் பொழுது நமது வழிகாட்டிகளின் கொள்கைகளைமட்டும் நாம் ஏற்போமா பயனுள்ள திட்டங்களெல்லாம் எழுத்துருக்கொண்டு ஏட்டிலேயே படுத்துறங்குவதற்கு இதுவும் ஒரு காரணமன்றோ!

எனவே, கூட்டணி தமிழ் மக்கள் நலம் கருதி பல திட்டங்கள் இயற்றலாம். இத்திட்டங்கள் எல்லாம் சரியானவையென்றோ, பிழையானவையென்றோ கூற முடியாது. சரியானதும், பயன்மிகவுமான திட்டங்களை வர்க்கபேதமற்ற ஒற்றுமையின் துணைகொண்டு அயராத சிந்தையுடன் நிறைவேற்ற நாம் எல்லோரும் முழுமூச்சுடன் உழைக்க வேண்டும். தமிழர் கூட்டணி திட்டங்களைத் துரிதகதியில் செயற்படுத்த வேண்டும். அதனால் எமது விடுதலைப் பணியும் தொடரட்டும்!

## சுதந்திரன் கருத்தரங்கு

# முழுநேர ஊழியர்களாக சிலராவது மாற வேண்டும்!

அன்புள்ள ஆசிரியருக்கு:-

'கூட்டணியின் தீர்மானங்களை செயற்படுத்தவும் நடவடிக்கைகளைத் துரிதப் படுத்தவும் ஒரு சிலராவது முழு நேர ஊழியராக மாறவேண்டும்!'

என்று தாங்கள் தங்களின் இருவாரங்களுக்கு முந்திய சுதந்திரன் தலையங்கத்தில் கூறியிருப்பதை நான் மிகவும் வரவேற்பதோடு அதை வலுவாகவற்புறுத்தவும் விரும்புகின்றேன். நான் மட்டுமல்ல, இந்த நாட்டில் வாழும் எத்தனையோ தமிழ் மக்கள்—குறிப்பாக வாலிபர்கள்—வற்புறுத்த விரும்புகிறார்கள்; கேட்டுக்கொண்டு வருகிறார்கள் என்பதையும் நான் நன்கு அறிவேன்.

இந்த நாட்டிலுள்ள தமிழ் மக்களில் தமிழர் கூட்டணியை ஆதரிக்கின்றவர்கள் மாத்திரமல்ல அதை ஆதரிக்காதவர்களும் கூட இக் கேள்வியையே கேட்கின்றனர்;

தமிழ் மக்கள் மாத்திரமல்ல தமிழரல்லாதவர்களும் இதையே கேட்கின்றனர்! வெளிநாடுகளிலுள்ள ஈழத் தமிழ் மக்களும், ஈழத் தமிழ் மக்களின் விடுதலையில் அக்கறை கொண்ட வெளிநாட்டுத் தமிழ் மக்களும் கூட இதையே கேட்கின்றனர். வெளிநாட்டுப் பத்திரிகை நிருபர்களும் கூட அதையே கேட்கின்றனர்!

ஒரு அரசியல் கட்சி—அதுவும் அடக்கி ஒடுக்கப்பட்டு வரும் ஒரு இனத்தின் விடுதலை இயக்கம் — முழுநேர ஊழியர்கள் இல்லாமல் இயங்குவதை வேறெங்கு நாட்டிலென்னும் பார்க்க முடியுமா?

இந்நாட்டிலுள்ள வேறு எந்த ஒரு அரசியல் கட்சி—இயக்கம்—முழுநேர ஊழியர்கள் இல்லாமல் இயங்கி வருகின்றது?

தமிழர் கூட்டணியிலோ தமிழர் கூட்டணியில் அங்கம் வகிக்கும் கட்சிகளிலோ முழுநேர ஊழியர்கள் இல்லாமல் இருப்பது ஏனென்றால் முழுநேர ஊழியம் செய்வதற்கு தமிழ்த் தலைவர்களிடையே அப்படி ஒருவராவது இல்லை என்பதினாலா? அல்லதுபோனால், அப்படி முன்வரும் ஊழியர்களைத் தமிழ் மக்கள் தாபரித்துத் தாங்க மாட்டார்கள் என்பதினாலா?

ஆயிரக்கணக்கான லட்சக்கணக்கான தமிழ் மக்கள்—சாதாரணத் தொழிலாளி தொடக்கம் தனவந்தர்கள் வரையில்—மாதா மாதம் தங்கள் பங்கைக் கொடுப்பதற்குத் துடித்துக்கொண்டு இருக்கிறார்கள் என்பதை நான் அறிவேன்;

ஆனால், அதைச் சேகரித்துச் செயல்படுவதற்கு தலைவர்களும் தலைமைப் பீடமும் முன்வராமல் இருப்பது ஏனோ? மக்களிடம் பணம் பெற்று அவர்களுக்குச் சேவை செய்வது கூடாது என்ற ஒரு தவறான வெட்கத்தினலா?

அப்படி என்றால் இந்த உலகத்திலே ஒருவன் எந்தச் சேவையைத்தான் — தொழிலைத்தான் — வெட்கப்படாமல் செய்ய முடியும்? வைத்தியம் செய்யலாமா? வழக்குப் பேசலாமா? விடுகட்டலாமா? எதைத்தான் செய்யலாம் அப்படியென்றால் மகாத்மா காந்தி முதல் அண்ணா வரை மக்களின் உதவியைப் பெற்றுத்தானே அவர்கள் மக்களுக்குச்சேவை செய்தார்கள்! இதிலென்ன வெட்கம்?

— அருள் மா. இராசேந்திரம்
கொழும்பு-13

## கைரேகை எங்கே?

சோதிடர்:- என்ன தம்பி கை ரேகை பார்த்துப் பலன் சொல்ல உமது கையில் ரேகை ஒன்றையுமே காணவில்லையே?

தம்பி:- இப்போ சில காலமாகச் சீனி; சர்க்கரை பனங்கட்டியை உள்ளங் கையில் வைத்து நக்கி நக்கித்தான் தேனீர் குடிப்பேன். அதனால் கைரேகை தேய்ந்து விட்டது போலும்!

— முருகு

# யாழில் எழுந்த தமிழோசை

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

பிளவுபடுமே தவிர நன்மை கிடையாது! ஒரு நாட்டின் முன்னேற்றத்துக்கு இன ஒற்றுமைவேண்டும். எத்தனை இனம் உண்டோ, அத்தனை இனமும் பேசும் மொழிக்கு ஜனநாயக உரிமைவேண்டும்!"

இவ்வாறாக, தமிழ்மொழியின் உரிமையை மறுத்து வரும் தன் இனத்தவர்களுக்கு சரியான சாட்டையடி கொடுத்துவிட்டு தனது கட்டுரையை முடித்துக் கொண்டார் திரு. நாணயக்காரா. நாணயக்காராவின் துணிச்சலான இந்தக் குறிப்பு கருத்தரங்கில் கலந்துகொண்ட தமிழ் மக்களின் உள்ளங்களை மகிழ்வடையச் செய்தது!

திரு. நாணயக்காராவின் கட்டுரை மீது கருத்துக்கூற முன்வந்த தமிழரசுப் பிரதிநிதியான சரோஜ — புலவர் இராசு அவர்கள், தமிழகத்துக்கும், ஈழத்துக்குமிடையே யுள்ள தொடர்பு மிகப் பழைமையானதும், காலத்தால் பிரிக்கமுடியாததும் ஆகும் என்று குறிப்பிட்டார்.

"ஈழத்தைப் பெருமைப் படுத்தும் வகையில், பல தமிழ்க் கல்வெட்டுக்கள் தமிழகத்தில் இருக்கின்றன. 'துலங்கு ஒளி மணி இலங்கை' என்று ஒரு கல்வெட்டில் பொறிக்கப்பட்டிருக்கிறது. தமிழகத்திலுள்ள இராமபுரத்தில் 'இலங்கை அம்மன் கோவில்' என்ற பெயரில் ஓர் ஆலயம் இருக்கிறது. 'மாவிலங்கை' என்ற பெயரில்ஓர் ஊர் அங்கேஇருக்கிறது. அங்கு 'கங்கை' என்ற பெயரிலே ஆறுகள் நதிகள் அழைக்கப்படுவது போல, இங்கும் 'கங்கை' என்ற பெயரிலேயே அழைக்கப் படுகின்றன; திசைச் சொற்கள் பற்றி தமிழ் இலக்கியங்கள் பேசும்போது முதலில் சிங்களத்தையே குறிப்பிடுகின்றன. இவ்வாறு தமிழகத்துக்கும் ஈழத்துக்குமிடையே நெருங்கிய தொடர்பும் உறவும் இருந்து வந்திருக்கின்றன என்பதற்கு ஏராளமான ஆதாரங்கள் உண்டு!"

இவ்வாறாக புலவர் இராசு தமக்கேயுரிய கனிவான்ற குரலில் கருத்துரை வழங்கியபின்னர், சட்டக்கல்லூரி மாணவரும், மாநாட்டுப் பங்கேற்பாளர்களில் ஒருவருமாகிய இளைஞர் கனக—மனோகரன் பின்வருமாறு பேசினார்:-

"ஈழத்துக்கும், தமிழகத்துக்குமிடையே உவர்க்கடல் ஒன்றுதான் ஊடறுத்து நிற்கிறதே தவிர—ஏனைய அனைத்து உறவுகளாலும்—மொழியால், மதத்தால், கலைகளால், கலாசாரத்தால், பழக்கவழக்கங்களால் ஈழமும் தமிழகமும் இணைந்தே நிற்கின்றன. இந்த இணைப்பு காலத்தால் பிரிக்கமுடியாதது! இதை இங்கு பேசிய புலவர் இராசு மிகவும் அழுத்தமாக கூறினார். அதை நான் வரவேற்கிறேன். சிங்கள அன்பர் நாணயக்காராவின் துணிச்சலான கருத்துக்கள் எம்மைக் கவர்ந்தன. இரு இனங்களும் இணைந்து, இன்பபுரியாக இலங்கையை மாற்றுவதற்கு இரு இனங்களுக்கும், இருமொழிகளுக்கும் சம அந்தஸ்தும் சமவாய்ப்புக்களும் இருந்திட வேண்டும்! இதை அன்பர் நாணயக்காரா அவர்களை தமது கட்டுரையில் வற்புறுத்தியிருக்கிறார்! ஒரு மொழியை இன்னொரு மொழியினர் மீது திணிப்பதால் நாடு பிளவுபடும் என்று அவர் எச்சரித்ததுடன், எல்லா இனங்களினதும் ஜனநாயக உரிமைகள் பேணப்படவேண்டும் என்று வற்புறுத்தியிருக்கிறார். இரு இனங்களுக்கும், இரு மொழிகளுக்கும் சம உரிமையுள்ள ஓர் ஐக்கிய இலங்கையை உருவாக்க அவர் போன்றோர் உழைத்திட முன்வர வேண்டும்!"

இப்படித் திரு. கனக—மனோகரன் பேசியமர்ந்த பின்னர், இன்னும் பலர் இதையொட்டிக் கருத்துக் கூற முற்பட்டபோது—அன்றைய கட்டுரைகள் அனைத்தும் படித்துமுடிக்கப்பட்ட பின்னர், இறுதியிலேயே கருத்துரை வழங்குவதற்கு இடமளிக்கப்படும் என்று கூறி, கருத்தரங்குக்கு தலைமை வகித்த திரு. சு. வித்தியானந்தன் தடைவிதித்துவிட்டார்!

ஆனால், இறுதியில், அன்றைய கட்டுரைகள் அனைத்தும் படித்துமுடிக்கப்பட்ட போது, மதிய உணவுக்கு நேரமாகிவிட்டது. எனவே மேற்கொண்டு, கருத்துரை கோராமலேயே அன்றைய கருத்தரங்கு கலைந்தது.

நாணயக்காராவின் கட்டுரைமீது விவாதத்தை வளரவிட்டால், எங்கே அது 'அரசியல்' ஆகிவிடுமோ என்று உள்ளூர பேராசிரியர் வித்தியானந்தன் ஒருவேளை அஞ்சி இருந்தத் தந்திரோபாயத்தைக் கையாண்டிருக்கலாம்! அவரது அச்சமும் நியாயமானதுதானே!

—வளரும்




ஈழத்துத் தமிழ் மக்கள், தாங்கள் ஒரு தேசிய இனம் என்ற ரீதியில் தங்களுடைய மொழியுரிமை, நிலவுரிமை, குடியுரிமை, ஆட்சியுரிமை போன்றவற்றை மீட்டுக்கொள்ளவும், நிலைநாட்டவும், பாதுகாக்கவும் எடுத்து வரும் நடவடிக்கைகளை சிங்கள மக்களுக்கு எதிரானவையென்று திசைதிருப்பி, சிங்கள மக்கள் மத்தியிலே தமிழ்த் துவேஷத்தையும் கசப்பையும் விதைத்து வளர்த்து — அந்த துவேஷத்தையும் கசப்பையுமே ஆட்சியதிகாரத்தை கைப்பற்றுவதற்குரிய சாதனமாக இந்நாட்டிலுள்ள சிங்களக் கட்சிகள் 1956ம் ஆண்டிலிருந்து பயன்படுத்தி வருகின்றன.

தமிழ் மக்கள், தாம் ஒரு தேசிய இனம் என்ற ரீதியில், தங்கள் தனித்துவத்தை நிலைநாட்டவும் பேணவும், பாதுகாக்கவும் ஏற்ற நடவடிக்கைகளில் இறங்கினார்கள் என்றால் — அதுவும் 1956ம் ஆண்டிற்குப் பிறகுதான்! ஏனெனில், 1948 முதல் 1956 வரை, சிங்களமும் தமிழும் நாட்டின் ஆட்சிமொழிகள் என்ற நிலையை சிங்களக் கட்சிகள் அனைத்தும் ஏற்றுக்கொண்டிருந்ததால் — வேறு சிலபல மனத்தாங்கல்கள் இருந்த போதிலும் — ஐக்கிய இலங்கையில் சிங்களவர்களுடன் சமவுரிமையுள்ள மக்களாக சுயமரியாதையுடன் பரஸ்பரம் சேர்ந்துவாழலாம் என்ற நம்பிக்கை தமிழ் சமுதாயத்துக்கு இருந்து வந்திருக்கிறது.

அந்த நிலையை மாற்றி — தமிழின் ஆட்சியுரிமையை பறித்து — சிங்களத்தை மட்டுமே நாட்டின் ஏகபோக ஆட்சிமொழியாக்கும் கொள்கையை 1956ம் ஆண்டு இரு பெரும் சிங்களக்கட்சிகளும் ஏற்றுக்கொண்டு — சிங்களம் மட்டும் சட்டத்தைக்கொண்டு வந்ததன் பின்பே — தமிழ் மக்கள் தங்கள் சுதந்திரத்தையும் சுயமாதீனத்தையும் நிலைநாட்டிக்கொள்வதற்கு, தனியொரு தேசிய இனம் என்ற அடிப்படையில் உரிமைப்போராட்டங்களை நடத்திவருகிறார்கள்!

தமிழ் மக்களின் உரிமைக் கோரிக்கைகளுக்கு, சிங்கள மக்களிடையேயுள்ள ஒரு சில சக்திகள், 1956ம் ஆண்டுக்குப் பின்னரும் சில ஆண்டுகள் தொடர்ந்து ஆதரவு நல்கி வந்த போதிலும் — தமிழ் மக்களுக்கு ஆதரவாக இருந்தால், சிங்கள மக்களிடைய தாம் நிலைத்துக் காலூன்ற முடியாது 'என்பதைக் கண்டுகொண்ட அச்சக்திகளும் 1964ம் ஆண்டு தடம்புரண்டு, சிங்கள இனவெறி என்னும் வெள்ளத்துள் மூழ்கிவிட்டன!

அவ்வளவுதூரம், தமிழுக்கும் தமிழ் மக்களுக்கும் எதிரான துவேஷம், மிகவும் பயங்கரமான முறையில் சிங்கள மக்களின் உள்ளங்களில் மிகவும் ஆழமாக விதைக்கப்பட்டிருக்கிறது. சிங்கள மக்களின் நம்பிக்கைக்குரியவர்கள் தாமே என்று கூறிக்கொள்ளும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மூலவர் — சிங்களத் தேசிய உணர்வின் வடிவம் என்று கருதப்படும் காலம் சென்ற திரு. எஸ். டபிள்யூ. ஆர். டீ. பண்டாரநாயக்கா பாராளுமன்றத்தில், தமிழ் மொழியைப் பற்றி, கூறிய ஒரு கருத்து இதற்கு சரியான உதாரணமாக விளங்குகிறது.

இந்திய மொழிகளிலேயே மிகவும் தாழ்ந்த — இழிவான மொழி—தமிழ் மொழிதான்!

என்று அவர் அப்போது கூறியிருந்தார். இவ்வளவு தூரம் தமிழுக்கும், தமிழ் மக்களுக்கும் எதிரான வெறுப்புணர்ச்சி சிங்கள மக்களிடையே விதைக்கப்பட்டிருக்கிறது!

ஏன், நான்காவது உலகத் தமிழ் மாநாட்டை யாழ்ப்பாணத்தில் நடைபெற விடாது தடுக்கமுயன்ற சக்திகள் — இந்த மாநாட்டுக்கு எதிராக சிங்கள மக்களின் துவேஷ உணர்வைத் திருப்பி விடும் நோக்குடன் — நடைபெறப் போவது ஆராய்ச்சி மாநாடல்ல; இனவெறி மாநாடு; தமிழ் வெறிக்கு உயிரூட்டும் மாநாடு; சிங்களவர்களுக்கு எதிரான மாநாடு என்றெல்லாம் குறுகிய நச்சுப்பிரச்சாரத்தில் ஈடுபட்டிருந்ததை யார்தான் மறக்க முடியும்? இதில் வெட்கத்துக்கும் துக்கத்துக்குமுரிய அம்சம் என்னவென்றால் — இத்தகைய பிரசாரத்தை நடத்தியவர்கள் சிங்களவர்களல்ல சிங்களக்கட்சிகளின் எடுபிடிகளாக இருக்கும் ஒரு சில துரோகத் தமிழர்கள் என்பதுதான்!

தமிழுக்கும், தமிழர்களுக்குமெதிராக சிங்கள மக்களிடையே இவ்வளவு தூரம் சிங்கள அரசியல் வாதிகளால் விரோதமும் வெறுப்பும் விதைக்கப்பட்டு வந்த போதிலும் — தமிழையும் தமிழ் மக்களையும் மதித்து, அவர்களுடன் நண்பர்களாக வாழவிரும்பும் சிங்களப் பெருமக்கள் — பெருந்தொகையாக இல்லாவிடினும் — இன்னும் சிலராவது இருக்கவே செய்கிறார்கள் என்பதை மாநாட்டில் மகிழ்ச்சியுடன் கலந்து கொண்ட சிங்கள அறிஞர்கள் நிரூபித்துக் காட்டி விட்டார்கள்!

## கோவை-மகேசன்

உலகத்தமிழ் மாநாட்டை 'இனவெறி மாநாடு' என்று சிலபத்திரிகைகள் அழைத்த போதிலும் — அதையெல்லாம் அலட்சியம் செய்துவிட்டு மாநாட்டில் கலந்து கொண்ட சிங்கள அறிஞர்கள், கருத்தரங்கில் படித்த கட்டுரைகள், தமிழைப் பற்றியும், தமிழர்களைப் பற்றியும், மலைநாட்டுத் தமிழர் பற்றியும், பழம் பெரும் சிங்கள மன்னர்கள் தமிழ் நாட்டுடன் கொண்டிருந்த உறவு பற்றியுமே அமைந்திருந்தன.

இலங்கைப் பல்கலைக்கழகத்தின் கொழும்பு, பேராதனை வளாகங்களைச் சேர்ந்த ஜோர்ஜ் ஸ்ரீமதி தேவராஜா, விஜயசமரவீர, ஆகியோரும் அறிஞர் டி. டி. நாணயக்காரா அவர்களும் கருத்தரங்கில் படித்த கட்டுரைகள் பலருடைய கவனத்தையும் கவர்ந்ததுடன் சுவையான கருத்துரையாடல்களுக்கும் காரணமாக அமைந்தன.

அதிலும், சிங்கள அறிஞரான திரு. நாணயக்காரா — தமிழைப்பற்றிய தமது கட்டுரையை தமிழிலேயே எழுதி தமிழிலேயே படித்தது இங்கு குறிப்பிடத்தக்கது. ஆம், தமிழரல்லாத ஒருவர், தமிழிலேயே தமது கட்டுரையை எழுதி, தமிழிலேயே அதைப் படித்தார் என்றால் — அந்தப் பெருமையை நிலைநாட்டியது நான்காவது உலகத் தமிழ் மாநாடுதான்!

மாநாட்டில் தமிழில் கட்டுரை படித்த தமிழரல்லாத மற்றொருவர் சுவிட்சர்லாந்திலிருந்து வந்திருந்தபேராசிரியர் செலர் அவர்களாகும். ஆனால் அவர் தனதுதமிழ்க்கட்டுரையை ஆங்கில எழுத்துக்களிலேயே எழுதியிருந்தார்.

பாணந்துறையைச் சேர்ந்த அன்பர் நாணயக்காரா ஓர் இளைப்பாறிய சிங்களத் தலைமை ஆசிரியர்; மூதறிஞர் ராஜாஜியின் கதைகளையும், ஆறுமுகநாவலரின் சைவ வினாவிடையையும் சிங்களத்தில் மொழி பெயர்த்தவர்; தமிழாராய்ச்சிமன்ற இலங்கைக் கிளையின் உறுப்பினர்.

'நானும் தமிழும்' என்ற தலைப்பில் அவர் கருத்தரங்கில் படித்த கட்டுரையை நூற்றுக்கு நூறு வீதம் ஓர்

### 16. சிங்கள அறிஞரின் செந்தமிழ் முழக்கம்!

ஆராய்ச்சிக் கட்டுரையென்று கூறமுடியாவிட்டாலும், பிறமொழியாளர் ஒருவர் தமிழின் அருமை பெருமைகளால் எவ்வளவு தூரம் கவரப்பட்டுள்ளார் என்பதை எடுத்துக்காட்டுவதாக அமைந்தது.

சிங்கள அறிஞர் நாணயக்காரா தமது கட்டுரையில் குறிப்பிட்டிருந்த சில முக்கிய பகுதிகள் வருமாறு:-

'தமிழ் பழமை வாய்ந்த மொழிகளுள் முதன்மையானது என்பதை உணர்கிறேன். நினைவுக்கெட்டாக் காலத்திலிருந்து நிகழ்ந்து வரும் மொழி வரலாற்றைப் பற்றித் தீர்க்கமாக கூற முடியாவிடினும், தமிழ் மொழியைப் பொறுத்த வரையில் அது காலத்தால் முற்பட்டது என்று கூறுவதற்கு ஆதாரங்கள் உள. இத்தகைய ஆதாரங்கள் பிறமொழிகளுக்கு இல்லையென்றே சொல்லிவிடலாம்! ஆதி திராவிட நாகரிக மேடுகளான இந்துவெளி அகழ்வாராய்ச்சியிலிருந்து வெளியாகிய மொகஞ்சதரோ ஹரப்பா சிங்குதாரோ என்ற இடங்களில் கண்டுபிடிக்கப்பட்ட கருவூலங்கள் திராவிட இனத்தினரே தொன்மையான நாகரிக மக்கள் என்பதை வெளிப்படுத்தியுள்ளன.

தமிழ் என்றும் அழிவில்லாதது தனக்குரிய இலக்கண வரம்பில் வளர்ந்து தமிழ் இலக்கியங்களை அடக்கியிருத்தல் காரணமாக கன்னித் தமிழ் என்றும் அழியாக் குமரி என்றும் அழைக்கப்படுகிறது. இதன் அறிகுறியாக, இன்றும் தமிழ்த்தெய்வம் சிலை வடிவில் இந்தியாத் தென்கைத்து கன்னியாகுமரி முனையில் வழிபடப்படுகிறது!

தனித்துவமாக வளர்ந்த தமிழ்மொழிக்கு ஆரியர் வருகை சற்றுத்தடையாகவே இருந்தது. இந்த ஆரியர் ஐரோப்பாவின் வடபகுதியிலிருந்து தெற்கு நோக்கி நகர்ந்து வருகையில், இடைப்பட்ட நாடுகளின் மொழி, கலாசாரம், போர் முறை இவற்றைத் தழுவி ஒரு புதிய புரட்சிகரமான இனமாக — இந்தியாவின் 'பலசாதிவாசல்' என்று அழைக்கப்படும் 'கைபர் கணவாய்' வழியாக இந்தியாவிற்குள் நுழைந்தனர்; நுழைந்தவர்கள், ஆத்மீக சாதனையோடு மௌனிகளாக வாழ்ந்த நாகரிகம் படைத்த திராவிடரைப் பார்த்ததும் பொறாமையுற்று— அவர்களது மொழி கலாசாரங்களை பின்பற்றி தமது ஆரிய கலாசாரத்தை வளர்த்துக்கொண்டு திராவிடரைத்தெற்கே துரத்தினர். பல தமிழ்ப் பதங்கள் தமிழிலிருந்து ஆரியத்திற்கு போய் திரும்பவும் ஆரிய பதம்போல போலி வேடந்தாங்கி தமிழில் வழங்கப்படுகிறது. இந்த உண்மையை மொழி ஆராய்ச்சி வல்லுனர் மறுப்பதற்கில்லை.

தமிழை வளர்ந்த ஓர் இனம் உண்டல்லவா? அவர்கள் தங்கள் ஒழுக்கச் சார்புள்ள கலாசாரங்களை வளர்ப்பதற்கு பன்னெடுங்காலப் பயிற்சியில் ஊறியிருத்தல் வேண்டும். ஆகவேதான் கடைச்சங்ககால இலக்கியங்கள் மிகவும் பண்பு வாய்ந்த ஒழுக்க நெறிகளைக் காட்டுகின்றன. 'யாதும் ஊரே யாவரும் கேளிர்', 'உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே', 'ஒழுக்கம் உயர்குலத்தின் நன்று', 'ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும்', 'நெல்லும் உயிரன்றே நீரும் உயிரன்றே மன்னன் உயிர்த்தே மலர் தலை உலகம்', —இவ்வாறு கூறப்படும் —பண்பாடுகள் ஓரினத்தில் அமைவதற்கு அறிவு வளம் பெருக்கும் நூல்களின் வளர்ச்சியே காரணம்!'

—இவ்வாறாக தமிழின் பெருமையை எடுத்துக்கூறிய நாணயக்காரா, இராவணன் காலத்தில் ஈழத்தில் வாழ்ந்தவர்கள் திராவிடர்களே யென்று அறுதியிட்டுக் கூறினார்.

அதுமட்டுமன்றி— இலங்கைக்கு பௌத்த மதம் வருவதற்கு முன்பே சைவமும் தமிழும் வழக்கில் இருந்ததை, 'மூத்தசிவன்' போன்ற அரசர்களின் பெயரிலிருந்து நன்கு தெரிவதாக அழுத்தந்திருத்தமாக கூறினார் திரு. நாணயக்காரா.

வரலாற்றையே மாற்றித்திரித்து எழுதி—தமிழ் மக்களை 'வந்தேறு குடிகள்' ஆகக் காட்டுவதற்கு சிங்கள வரலாற்றாளர்கள் பலர் குறுகிய இனக்குரோத சிந்தனையுடன் முயற்சித்து வருகையில் — துணிச்சலாக முன்வந்து இவ்வாறு உண்மையைச் சுட்டிக்காட்டிய ஒரேயொரு சிங்களவரான திரு. நாணயக்காரா அவர்களை இலட்சத்தில் ஒருவர் என்று கூறலாம்!

பிறமொழிக்கலப்பின்றி தமிழ்மொழி இல்லை என்பதையும் திரு. நாணயக்காரா பின்வருமாறு ஆணித்தரமாக வற்புறுத்தினார்:

'தமிழ் இந்திய தென்னகத்திலே பிறந்ததாயினும் இலங்கை வாழ் மக்கள் மத்தியிலேதான் அழகிய பேச்சு உருவில் திகழுகிறது. தமிழ் தமிழாகப் பேசப்படுகிறது! தமிழ் பிறந்த மண்ணிலே அதனை வழுவின்றித் தமிழர் பேசவில்லை என்பது அவர்கள் குற்றம் அல்ல. அங்கே தமிழைப் பேசும் சூழ்நிலை அத்தகைய மாற்றத்தைக் கொடுக்கிறது; காரணம் பல மொழிகளின் மத்தியிலே தமிழர்கள் அங்கு வாழ்கிறார்கள். சேரர் வளர்த்த தமிழ் இன்று சேரநாட்டிலே இல்லை! இதேபோல பாண்டிநாட்டிலும், சோழநாட்டி


கனக—மனோகரன்

லும் பேச்சுவழக்கில் சிதைவுகள் அதிகம்! காரணம் பிறமொழிக் கலப்புகள் அங்கே அதிகமாக இருந்ததால் சொற்கள் சிதைந்தும் திரிந்தும் குறுகியும் மக்கள் வழக்கில் இயங்குகின்றன.''

தமிழ்நாட்டில் தமிழ் சிதைவுற்றதற்கு காரணம் பிறமொழிக் கலப்புத்தான் என்று ஆணித்தரமாக இவ்வாறு குறிப்பிட்ட திரு. நாணயக்கார, இலங்கையில் தமிழ் சிதைவுறாமல் பிறமொழிக் கலப்பின்றி பேசப்படுகிறது என்றால், அதற்கு காரணம் ஆறுமுகநாவலர், ஞானப்பிரகாச அடிகளார் போன்றோர் மரபு அழியாமல் தமிழைப் பேணி வளர்த்து வந்ததுதான் என்று குறிப்பிட்டார்.

[தமிழில் ஏராளமான சிங்களச் சொற்கள் இப்போது புகுத்தப்பட்டுவரும் வேகத்தைப் பார்த்தால் — அப்படி இனிக்கப்படுவதை நாம் அனுமதித்தால் — இலங்கையில் பேசப்படும் தமிழே தூய்மையானது என்று நாம் நீண்டகாலம் பெருமையடித்துக்கொள்ள முடியாது! நாணயக்காராவின் எச்சரிக்கையாவது தமிழரின் கண்களைத் திறக்கட்டும்!]

தமது கட்டுரையின் இறுதியில் பின்வருமாறு திரு. நாணயக்காரா திட்டவட்டமாகக் குறிப்பிட்டார்:-

"சிறந்த மொழியைத் தாய்மொழியாகக் கொண்ட ஓர் இனத்தின்மீது வேறொரு மொழியைக் கற்கவேண்டும் என்று வலிந்து திணிப்பதனால் இன வேற்றுமையும் பகையும் ஏற்பட்டு நாடு

(2-ம் பக்கம் பார்க்க)

## எண்ணம்

# பத்திரிகைகளை கொல்ல முயற்சியா?

ஜனநாயகத்தை நாம்தான் காப்பாற்றுகிறோம் என்று அரசாங்கக்கட்சியினர் அடிக்கடி தற்பெருமை அடித்துக்கொள்ளத் தவறுவதில்லை!

ஒருவரைப் பிடித்து, அவரது கைகளுக்கும் கால்களுக்கும் சங்கிலி போட்டு பூட்டி, வாயையும் கட்டி ஓர் அறைக்குள் அவரைத் தள்ளி, பென்னம்பெரிய பூட்டொன்றைப் போட்டு அறைக் கதவைப்பூட்டி—வாசலிலும் துப்பாக்கி ஏந்திய இருவரைக் காவல் வைத்துவிட்டு—உள்ளேயிருப்பவரை பாதுகாக்கத்தான் இவ்வாறு செய்கிறேன் என்று ஒருவர் கூறினால் அது எப்படி இருக்குமோ அவ்வாறேயிருக்கிறது இன்றைய அரசு ஜனநாயகத்தை காப்பாற்றுகின்ற இலட்சணமும்!

அவசரகாலச்சட்டம் எனும் பாசிஸ்ட் சட்டத்தின் அத்தனை விதிகளையும் பிரயோகித்து சர்வாதிகார வெறியாட்டம் போடும் அரசாங்கம், ஜனநாயகத்தைப் பாதுகாக்கவே தான் இவ்வாறு செய்வதாகவும் நாடகமாடி வருகிறது.

ஜனநாயகம் என்னும் எழில் பறவையின் இறக்கைகளை நாள்தோறும் ஒவ்வொன்ருகப்பிய்த்துப் பிடுங்கி வருகின்றன அரசின் நடவடிக்கைகள்!

இதில் மற்ருேர் நடவடிக்கை தான் பத்திரிகைத் தாளின் விலை திடீரென்று எக்கச்சக்கமாக உயர்த்தப் பட்டிருப்பதாகும்!

ஜனநாயகத்தின் காவல் நாய்கள் ஒரு நாட்டிலுள்ள பத்திரிகைகளும், எதிர்க்கட்சிகளுமே!

ஜனநாயகம் செம்மையாகவும், சீராகவும் சிறப்பாகவும், இயங்குவதற்கு உயிர் நாடியாக விளங்குபவை இந்த இரண்டு சக்திகளும் தான்!

பத்திரிகைச் சுதந்திரம் இல்லாத ஒரு நாட்டில் ஜனநாயகம் ஆழக்குழிதோண்டிப்புதைக்கப்பட்டுவிடும்!

ஆனால் இந்நாட்டிலோ எதிர்க்கட்சிகளின் நடவடிக்கைகளை கட்டுப்படுத்தவும் மட்டுப்படுத்தவும் நசுக்கவும் அவசரகாலச்சட்ட விதிகள் பயன்படுத்தப்படுகின்றன.

பத்திரிகை சுதந்திரத்தை பறிக்கவும் நசுக்கவும் அதே விதிகள் ஏவி விடப்படுகின்றன.

இவை ஒருபக்கம் —

மறுபக்கத்திலோ, பத்திரிகை அச்சிடும் தாளை போதியளவு தருமாறு கோரினால் கையிருப்பில் இல்லையென்று கைவிரிக்கப்படுகிறது.

சாதாரணமாக பத்திரிகை அச்சிடும் தாளான 'நியூஸ் பிரிண்ட்' தான் கையிருப்பில் இல்லையென்று கைவிரித்து வந்த தாளாலைக்கூட்டுத்தாபனம், உள்ளூரில் உற்பத்தி செய்யப்பட்ட ஒருவகைத்தாளை பத்திரிகை அச்சிடுவதற்காக றீம் ஒன்று ரூபா 59.95 சதவீதம் வழங்கிவந்தது—அதுவும் கட்டுப்படுத்தப்பட்ட அளவில்!

இப்போது திடீரென்று சென்ற மே 20-ம் திகதி முதல் அதே தாளின் விலையை றீம் ஒன்றுக்கு மேலும் ஐம்பது ரூபாயால் அதிகரித்துள்ளது — அதாவது றீம் ஒன்றுக்கு ரூபா 59—95 வீதம் தாளாலைக்கூட்டுத்தாபனத்திற்கு கொடுத்து வந்த நாம், இனி றீம் ஒன்றுக்கு ரூபா 110—00 கொடுக்க வேண்டியுள்ளது.

இப்படி விலை உயர்த்தப்பட்டதற்கு காரணம்— தாளின் உற்பத்தி செலவுகள் அதிகரிக்கப்பட்டதுதான் என்று காரணம் கூறப்படுகிறது. என்னதான் உற்பத்திச் செலவு அதிகரித்திருந்தாலும் — றீம் ஒன்றுக்கு ஐம்பது ரூபா வீதம் இப்படி திடீரென்று விலையை அதிகரித்தால், இந்நாட்டுப் பத்திரிகைகளின் நிலைமை என்ன? பத்திரிகையின் விலையை எவ்வளவுக்குத்தான் உயர்த்தமுடியும்? வாசகர்கள் மீது எவ்வளவுக்குத்தான் சுமையை ஏற்றமுடியும்? வாங்கும் சக்தி அவர்களுக்கு வேண்டுமே!

இன்றைக்கு உணவுப் பொருட்களினதும், ஏனைய அத்தியாவசியப் பொருட்களினதும் விலையேற்றத்தால் அளவுக்குமிஞ்சித் துன்புறும் பொதுமக்கள், பத்திரிகை விலை உயர்வுப்பழுவையும் அளவுக்கதிகமாக எப்படித் தாங்கிக்கொள்ளமுடியும்?

உள்ளூரில் தமிழ் சஞ்சிகைகளின் வளர்ச்சிக்கு ஆக்கமும், ஊக்கமும், அளிப்பதாக வாக்குறுதியளித்து - இந்திய தமிழ் சஞ்சிகைகளை தடைசெய்தவர்கள், உள்ளூர் தமிழ் சஞ்சிகைகளின் வளர்ச்சிக்கு உதவும் இலட்சணம் தாள் விலையின் அபரிமித உயர்வுதானு? இந்த விலை உயர்வினுல் உள்ளூர் தமிழ் சஞ்சிகைகள் கருகிமடிந்துபோக நேரிடுமே தவிர எப்படி உயிர்வாழமுடியும்?

தாள் விலையேற்றத்தைப் பயன்படுத்தி — பத்திரிகைகளை மூச்சுத் திணறடித்து—அவற்றை கொலைசெய்துவிடத்தான் இப்படிப்பட்ட சூழ்ச்சியில் அரசு இறங்கியுள்ளதா என்ற சந்தேகமே நமக்கு ஏற்படுகிறது.

அரசு சார்பான ஒரே ஒரு பத்திரிகை மட்டும் இந்நாட்டில் வெளிவந்தால்போதும்—வேறு பத்திரிகைகளே இங்கு இருக்கக்கூடாது என்பதுதான் அரசின் எண்ணமா என்றகேள்வி ஒவ்வொருவர் நெஞ்சிலும் பிறக்கிறது.

அப்படியில்லையென்றுல்— தாள் விலை உயர்வை கைத்தொழில் விஞ்ஞான அமைச்சர் மறுபரிசீலனை செய்ய வேண்டும்; இந்நாட்டுப் பத்திரிகைகள், சஞ்சிகைகளுக்காவது நியாயமான விலையில் தாள் கிடைப்பதற்கு ஏற்ற நடவடிக்கைகளை தாமதியாது அரசு மேற்கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேம்.

# தமிழ் ஈழத்தில் பூரண துக்கம்!

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தவர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது;

காயமடைந்தவர்களில் முன்னுள் மகியங்கனை பா.உ. காப்டன் சி. பி. ஜே. செனிவிரத்தின முன்னுள் நீதியமைச்சர் ஏ.எப். விஜயமான ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்களாகும்.

இச் சத்தியாக்கிரகத்தில் எதிர்க்கட்சித் தலைவர் ஜே. ஆர். ஜெயவர்த்தனு, பிரேமதாசா ஆகியோருடன், இ.தொ.கா. பொதுச்செயலாளர் திரு.எம். எஸ். செல்லச்சாமியும் கலந்துகொண்டது குறிப்பிடத்தக்கது.

பொலீசார் நடத்திய குண்டாந்தடித் தாக்குதலுக்கு அப்பகுதியால் ஆஸ்பத்திரி நோக்கிச் சென்ற சில நோயாளர்களும் பத்திரிகை நிருபர்களும் ஆளானுர்கள்;

இதே வேளையில், தமிழர் கூட்டணியின் வேண்டுகோட்படி யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, மன்னூர், வவுனியா, திருக்கோணமலை போன்ற தமிழ்த் தலைநகரெங்கும் பூரண துக்கம் அனுட்டிக்கப்பட்டன. கறுப்புக் கொடிகளும் பறக்கவிடப்பட்டன: கூட்டணி அலுவலகங்களிலும், தலைவர்களின் வீடுகளிலும், கட்டிடங்களிலும் கறுப்புக்கொடிகள் பறந்தன மாணவ மாணவிகள் பாடசாலையில் நடைபெற்ற குடியரசு விழாக்களை பூரணமாகப் பகிஷ்கரித்தனர்.

### துண்டுப்பிரசுரம்

குடியரசு தின பகிஷ்கரிப்பு சம்பந்தமாக தமிழர் கூட்டணி விடுத்திருந்த வேண்டுகோளில் பின் வருமாறு குறிப்பிடப்பட்டிருந்தது.

''குடியரசு என்ற பெயரால் இந்நாட்டில் தமிழினம் அடிமையாக்கப்பட்டு இரண்டு ஆண்டுகள் பூர்த்தியாகின்றன. அரசியலமைப்பு என்ற அடிமை விலங்கு அவசரகாலச் சட்டத்தின் கீழ் மேலும் இறுக்கப்பட்டு அடிப்படை மனித உரிமைகள் அத்தனையுமே பறிக்கப்பட்டுவிட்டன.

தமிழ் மொழி பற்றி மாநாடு நடத்தவும் உரிமையின்றித் தமிழன் தாக்கப்பட்டுச் சாகடிக்கப்படுகிறுன். சனவரி 10ம் திகதி நடந்த படுகொலைக்குப் பின் தமிழனுக்கு இந்நாட்டின் ஆட்சி அளிப்பது சாக்காடுதான் என்பதில் யாருக்கும் சந்தேகமுண்டா?

அதே நேரத்தில் தமிழ் வாலிபர்கள் அடிக்கடி கைது செய்யப்பட்டுத் துன்புறுத்தப்பட்டு வருடக்கணக்கில் விசாரணை இன்றிச் சிறைகளில் வாடுகின்றனர். தமிழ் மாணவர் சமுதாயத்திற்கு மற்றெவ்வருடத்திலும் பார்க்க இவ்வருடம் மோசமாகத் தரப்படுத்தல் என்ற சுருக்குப் போடப்பட்டு பல்கலைக்கழகக் கதவுகள் தகுதி வாய்ந்த பல்லாயிரம் பேருக்குச் சாத்தப்படுகின்றன.

இவற்றைப்பார்த்த பின்பும் குடியரசு தினக் கொண்டாட்டங்களில் தமிழருக்குப் பங்குண்டா?

22ந் திகதியைத் துக்க தினமாக, இழந்த உரிமைகளை மீண்டும் பெற உறுதி பூணும் தினமாக கைக்கொள்ளுங்கள்.

மாணவ சமுதாயமே! சிறையில் வாடும் தோழர்கள் மேல் ஆணையாக, ஜனவரி 10ல் செத்துமடிந்த செந்தமிழ் மக்கள் மீது ஆணையாக 22ந் திகதி வைபவங்களை எல்லாம் பகிஷ்கரிப்பீர் விளையாட்டு போட்டிகள், கலை நிகழ்ச்சிகள், கொடியேற்று விழாக்கள் எதிலும் எவரும் கலந்து கொள்ளாதீர்!

தமிழ் பெற்ருேர்களே! உயர் கல்வி பெருது எமது மாணவர் தடுக்கப்படும் போது உங்கள் செல்வக் குழந்தைகளை எந்த அடிமை விழாக்களிலும் கலந்து கொள்ள அனுப்பாதீர்;

அன்று மாலை ஆங்காங்கு நடைபெறும் தமிழர் கூட்டணி கூட்டங்களில் கலந்து கொள்ளுங்கள்.

அன்பு வழியில் அடக்குமுறையை எதிர்ப்போம்''

# இலங்கை மத்திய வங்கி தமிழ் ஆண்டறிக்கை

இலங்கையின் 1973 ஆம் ஆண்டின் பொருளியல் நிலையை எடுத்துரைக்கும் இலங்கை மத்திய வங்கியின் 1973ம் ஆண்டுத் தமிழ் அறிக்கை எமக்குக் கிடைத்துள்ளது.

இவ்வறிக்கையில் காணப்படும் நல்ல, இனிய, எளிய தமிழ்ச் சொற்கள் எம்மைக் கவர்ந்து இழுக்கின்றன. தவிர்க்க முடியாத சூழ்நிலைகளில் பொதுமக்களை நினைவில் வைத்து பிறமொழிச் சொற்கள் இடைக்கிடை கையாளப்பட்டுள்ளன. அவை கூட தமிழின் ஒலி வடிவை பெருமளவு பெற்றுள்ளன. இவ்வாண்டறிக்கையில் யாம் பெரிதும் விரும்பி வரவேற்கத்தக்க முறையில் ஒருமைப்பாடுடைய சொற்கள் இல்லாதது ஒரு சிறு குறைபோல் தோன்றுகிறது. குறிக்கப்பட்ட குறுகிய கால எல்லைக்குள் குறிக்கப்பட்ட சிலர் விரைந்து மொழிபெயர்க்க வேண்டிய சூழ்நிலையில் இக்குறைகள் ஏற்படுவதைத் தவிர்ப்பது கடினம் எனினும் ஒருமைப்பாடுடைய பொருளியல் கலைச்சொற்களை இம் மொழிபெயர்ப்பாளர்கள் தமக்குள் உருவாக்கி அவற்றைக் கையாளின் வாசக வட்டம் பெருமளவு நன்மை பெறும்.

இந்தியத் துணைக் கண்டத்தில இந்திய ரிசேவ் வங்கி ஆற்றும் பணியையே இலங்கை மத்திய வங்கி இலங்கையில் ஆற்றுகிறது. ஆனுல் யாம் அறிந்த வரையில் அவ்வங்கியின் அறிக்கை ஆங்கிலத்தில் மட்டுமே வெளிவருகிறது; ஆனுல் ஈழத்தில் மத்திய வங்கியின் அறிக்கையை தமிழில் வெளியிடும் நிலையை தமிழ்த் தலைவர்களும், தமிழ் மொழி வழித் தொழிற் சங்கங்களும் தோற்றுவித்துள்ளனர். இவ்வறிக்கையினுல் தமிழ்ப் பொதுச் மக்களும் சிறப்பாக தமிழ் மொழி வாயிலாக பொருளாதாரம் பயிலும் மாணவ மாணவிகளும் பெறும் பயனை எளிதில் எடுத்துரைக்க முடியாது.

---

# ஜனவேகத்தின்...

(9-ம் பக்கத் தொடர்ச்சி)

தலைவரும் சுதந்திரன் நிறுவனத்தின் பழம் பெரும் ஊழியருமான திரு. நா. நாகலிங்கம் அவர்கள் வாக்குறுதி அளித்தன் பேரில் சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிடெட் நிறுவனம் ஏற்கெனவே அறிவித்ததுபோல சுதந்திரனை ஏப்ரல் இறுதியுடன் நிறுத்தாமல் தொடர்ந்து வெளியிட்டு வருகிறதே தவிர ஜனவேகத்தினர் கூறுவது போல தந்தை செல்வநாயகம் யாருக்கும் அடிபணியவுமில்லை; அவர் யாருக்கும் அடிபணியவேண்டிய அவசியமுமில்லை. அவரது வாழ்க்கையில் அவர் யாருக்கும் அடிபணிந்ததும் கிடையாது இறுதிவரை அடிபணியப் போவதுமில்லை!

எனவே ஜனவேகத்தினர், நன்ருக குரைத்துக் கொண்டிருக்கட்டும்! அதனுல் நமக்கொன்றும் நட்டம் இல்லை! காகங்கள் திட்டி எருது சாவதில்லை!!

சுதந்திரன் நிர்வாகத்தினருக்கும், சுதந்திரன் தொழிலாளர்களுக்குமிடையே ஏற்பட்ட சிறு சிறு பிரச்சினைகளுக்கு அரசியல் மூலாம் பூசி, அதிலே குளிர்காய முயலும் பிற்போக்கு ஜனவேகக் கும்பலுக்கு, சுதந்திரன் தொழிலாளர்களின் தலைவரும், சுதந்திரன் பத்திரிகையின் பேரமனுமாகிய திரு. நா. நாகலிங்கம் அவர்கள் தந்துள்ள பின்வரும் கருத்து சரியான சவுக்கடியாக அமையும் என்று நம்புகிறேம்.

இதோ திரு. நாகலிங்கம் கூறுகிறுர்:-

''திரு. செல்வநாயகம் அவர்கள் சுதந்திரன் பத்திரிகையை நடத்துவதற்கு பட்ட கஷ்டங்களை நான் நன்கு அறிவேன். சுதந்திரன் பத்திரிகை நல்ல முறையில் வெளிவர வேண்டும் என்பது அவரது ஆசை; அவரது ஆசை மட்டுமன்றி எங்கள் எல்லோரது ஆசையும் அதுதான்!

''எந்த ஒரு நிறுவனத்திலும் நிர்வாகத்துக்கும் தொழிலாளர்களுக்குமிடையே சிறு சிறு பிரச்சினைகள் ஏற்படுவது சர்வசாதாரணம். இதை வெளியிலுள்ளவர்கள் அரசியலாக்க முயல்வது கண்டிக்கத்தக்கது.

''இப்போது எங்களுக்கும், சுதந்திரன் நிர்வாகத்துக்குமிடையேயிருந்து வந்த தப்பெண்ணங்கள் பெரும்பாலும் குறைந்துவிட்டன. நாங்கள் எல்லோரும் ஒன்றுபட்டு ஸ்தாபனத்தை முன்னேற்ற உறுதி பூண்டுள்ளோம், சுதந்திரன ஸ்தாபனம் வாழ்ந்தாலே அதில், வேலை செய்யும் தொழிலாளர்களாகிய நாமும் பிழைக்கமுடியும்!''

# சுவர் எழுத்தை கண்டாலே அரசுக்கு கிலி நடுக்கம் எடுக்கிறது!

சுவர்களில் அரசாங்கத்துக்கு விரோதமான சுலோகங்கள் எழுதப்பட்டிருப்பதைக் கண்டாலே, ஆட்சியாளர்களுக்கு இப்போதெல்லாம் கிலி நடுக்கம் ஏற்படுகிறது போலும்! அதனுல், சுவர்களில் அரசுக்கு விரோதமாக சுலோகங்கள் எழுதினுர்கள் என்ற சந்தேகத்தின்பேரில் தமிழ் இளைஞர்களை பொலிசார் வேட்டையாடி வருகின்றனர்.

சிறையிருக்கும் தவமைந்தன் மாவை - சேனுதிராஜாவின் சகோதரர் தங்கராசாவும் மேலும் மூன்று தமிழ் வாலிபர்களும் இது தொடர்பாகப் பொலிசாரால் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

காங்கேசன் துறையைச் சேர்ந்த செல்வநாயகம் குருநகரைச் சேர்ந்த ரஞ்சித், அன்ரன், ஆகியோரே ஏனைய மூன்று வாலிபர்களாவர்.

# இலங்கைத் தமிழர் பிரச்சினையில் இந்திய அரசு இழைத்த துரோகம்!

சென்னை ஏடான "உரிமை வேட்கை"யில் செம்பியன் எழுதியுள்ள இலங்கைத் தமிழர் பிரச்சினை சம்பந்தமான தொடர் கட்டுரையின் ஆறுவது பகுதி இது!

**1945** இலிருந்து பிரிட்டன் இலங்கையைத் தன் கப்பற்படைத் தளமாக்கிக் கொள்ள தீவிரம் காட்டி வருகின்றது. ஆசியாவில் தன் ஆதிக்கத்தின் கீழிருந்த பல நாடுகள் விடுதலை பெற்றுவிட்டாலும், இலங்கை, சிங்கப்பூர் ஆகிய இரு தீவுகளையாவது தன் கண்காணிப்பிலேனும், [நட்பாகவேனும் வைத்திருக்க பிரிட்டன் ஐந்தித்து வந்துள்ளது. ஆஸ்திரேலியாவைத் தன் அரணுக்குள் வைத்துப் பாதுகாக்கவும், தென் ஆப்பிரிக்காவின் வைரச் சுரங்கங்களைக் கொள்ளைகொண்டிருக்கவும் அதற்கிருக்கின்ற ஆசை, எல்லோருக்கும் புரியக்கூடியதே. அதன் காரணமாகவே, சீனா, ஜப்பான் போன்ற நாடுகளின் வலிமை அதிகரித்து வருவதைத் தாங்கிக் கொள்ள முடியாமல், இந்து மகாகடல், இந்தோ சீனக் கடல் ஆகிய இரண்டிலும் அது தன் கப்பற்படை நடமாட்டத்தை நீடித்து வர வேண்டும் எனக் கருதுகின்றது.

## பாதுகாப்பு ஒப்பந்தம்

சிங்கப்பூரில் காலூன்றிய பிரிட்டன் இலங்கையுடன் படை ஒப்பந்தம் செய்து கொண்டு, நேட்டோ (NATO) நாடுகளுக்கு வழிகாட்டியது. 1947 ஆம் ஆண்டு நவம்பர் 11 ஆம் நாள் இலங்கையும் பிரிட்டனும் செய்துகொண்ட பாதுகாப்பு ஒப்பந்தத்தின்படி, அதன் கப்பற்படைத் தளத்துக்கான இடங்களை இலங்கை தர வேண்டியதாயிற்று. அதன் கப்பற் படை, விமானப் படை ஆகியவற்றை இலங்கையில் நிறுவிப் பேண, ஏற்ற வசதிகளை இலங்கை செய்து தரவேண்டும்.

(The Government of the U. K. may base such naval and air forces and maintain such land forces in Ceylon. as may be required for these purposes, and as may be mutually agreed. —Art I and Art II)

இந்த வாய்ப்புகளைப் பயன்படுத்தி நேட்டோ நாடுகள் தம் செல்வாக்கு மண்டலத்தைத் தென்கிழக்காசியாவில் உறுதியாக்கிக் கொள்ளத் துணிகின்றன. இதனை முறியடிக்க கம்யூனிஸ்ட் நாடுகள் இலங்கைக்கு விரைந்து உதவிகள் செய்து தம் வசப்படுத்த முயல்கின்றன. சோவியத் நாடும், சீனாவும் தனித்தனியாக அதனை அரவணைக்கத் துடிப்பது தெளிவாகத் தெரிகின்றது. அவற்றின் ஆதரவு தேர்தல்களில் மிதமிஞ்சி கிடைத்ததாலேயே, திரு. பண்டாரநாயகா பல ஆண்டுகள் தொடர்ந்து ஆட்சிபுரிய முடிந்தது.

1956 ஆம் ஆண்டு ஜூலை மாதம் நடந்த பொதுநலக் கூட்டுறவு நாடுகள் (Commonwealth) தலைமை அமைச்சர்கள் மாநாட்டில் திரு. பண்டாரநாயகா, 'பல சர்வதேசக் குழுக்களில் சேர இடமிருந்தும், பொதுநலக் கூட்டுறவில் இருக்கும் ஆசிய நாடுகள் நிறைய பயன்களை இழக்க வேண்டி வருகின்றது' என்று பேசினார்.

(With the growth of international organisations, the practical advantages of Asian countries remaining in the Commonwealth are greatly reduced since there are other groupings we can become members of.)

திரு. பண்டாரநாயகாவின் மேற்கண்ட பேச்சு இலங்கையின் வெளிநாட்டுக் கொள்கை எந்தத் திசையை நோக்கித் திருப்பப் படுகின்றது என்பதை அடையாளம் காட்டுகின்றதல்லவா?

## கம்யூனிஸ்ட் நாடுகளின் தழுவல்!

பீகிங்கும், மாஸ்கோவும் இலங்கையிலிருந்து தேயிலை, ரப்பர், தேங்காய் ஆகியவற்றை இறக்குமதி செய்வதை, மற்ற எல்லா நாடுகளையும் விட மிகவும் அதிகரித்ததோடு, அதன் எந்திரமயப் பொருளாதாரத்தை உயர்த்தவும் கங்கணம் கட்டிக்கொண்டு நிற்கின்றன.

திருமதி பண்டாரநாயகா, இவ்விரு கம்யூனிஸ்ட் நாடுகளின் ஆவலுக்கு இனிப்பாகி, தம் ஆட்சியின் காலத்தை நீடித்துக் கொள்ளத் தயங்க மாட்டார்.

இந்த நிலையில் இலங்கைத் தமிழர் பிரச்சினையைத் தீர்க்க நாம் தேடிப்போகும் வழிகளில், வல்லரசுகளின் தலையீடும் ஒன்றாக இருக்க வேண்டும் எனத்தோன்றும். ஆனால் வல்லரசு நாடுகள் கைவைத்த பிரச்சினைகள் வலுத்தனவே அல்லாமல், ஒழிந்தபாடில்லை; கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் எழுந்த இதைப் போன்ற பிரச்சினைகள், வல்லரசு நாடுகளால் பின்னப்பட்டு பெரிதாகி காய்த்து காழ்ப்பேறி நிற்பதை மறப்போமா? எனவே, இலங்கைத் தமிழர்ப் பிரச்சினையில் நேட்டோ நாடுகளின் ஆதரவையோ, கம்யூனிஸ்ட் நாடுகளின் ஆதரவையோ நாடுவது, நம்பிக்கைக்கு உரிய வகை அல்ல.

இந்திய மத்திய அரசு இலங்கைத் தமிழர் பிரச்சினையைத் தீர்க்க இதுவரை ஏதேனும் செய்துள்ளதா என்று கேட்டால், தலை குனிவதைத் தவிர வழியில்லை.

இலங்கையுடன் இந்திய அரசு அங்கு வாழும் தமிழர்க்குக் குடியுரிமை, குடியுரிமை இழப்போருக்கு மறுவாழ்வு தருதல் ஆகியவைபற்றி சில ஒப்பந்தங்களைச் செய்து கொண்டுள்ளது.

1954 ஆம் ஆண்டு பிப்ரவரி 13 ஆம் நாளில் ஜவகர்லால் நேருவும், அந்நாளைய இலங்கையின் தலைமை அமைச்சர் ஜோன் கொத்தலாவலாவும் இருநாட்டுக்கிடையிலான ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டனர். இந்திய அதிகாரிகள், குறிப்பாக வட இந்தியர்கள், இலங்கை அதிகாரிகள்—அதாவது சிங்கள அதிகாரிகள்—சேர்ந்து தயாரித்த படிவத்தில், நேரு கையொப்பம் போட்டார். அதே ஆண்டு மே மாதம் 15இல் நடந்த நாடாளுமன்றக் கூட்டத்தில் அந்த ஒப்பந்தம் ஒரு 'தீர்வு' அல்ல, ஒரு முன் மாதிரியும் முதற்கட்டச் செயலுக்கு வாயிலுமே ஆகும் என்றார்.

வேடிக்கையைப் பார்த்தீர்களா? இலங்கைத் தமிழர்களை வெறும் பட்டுப்பூச்சிகள் என்றல்லவா நேரு கருதியிருக்கின்றார்? அவர்களின் பிரச்சினையை அளந்து முடிவெடுக்க ஆனந்த பவனக் கோமகனுக்கு நேரம் கிடைக்காமல் இருந்திருக்கலாம்! ஜெய்ப்பூர் மாளிகை விருந்தும், காஷ்மீர் படகு வீடுகளின் சிலிர்சிலிர்ப்பும் மணிப்புரி நாட்டியத்தைச் சுவைத்தலாவச் செய்வதல்லாமல், வேறென்ன செய்யும்? யாழ்ப்பாணம் பாழ்பட்டால் என்ன? வாழ்ந்தால் என்ன?

நேருவும் கொத்தலாவலவும் செய்து கொண்டுள்ள ஒப்பந்தத்தின்படி, இலங்கை அரசு, தேர்தல் பட்டியல்களில் கண்டுள்ள தமிழர்களுக்குக் குடியுரிமை வழங்க முன் வருமாம்; அதுவும் அடிக்கடி தேர்தல் பட்டியலை முறைப்படுத்துமாம்! அந்தப் பட்டியல்களில் இல்லாதவர்கள் இந்திய மொழியைப் பேசுவோராயிருப்பின் நாட்டை விட்டு வெளியேற வேண்டும்! அவர்களின் வெளியேற்றத்திற்கு இந்தியத் தூதர் ஏற்பாடுகளைச் செய்வார்!

The Government of Ceylon propose to undertake the preparation of a register of all adult residents. who are not already on the electoral register and will maintain such registers up-to-date. When this registration is completed, any person not so

(9-ம் பக்கம் பார்க்க)

# உலக அரசியலில் ஓர் ஆச்சரியக்குறி!

*10 வாரத்திற்குள் 11 தேசங்களுக்கு 4 முறை சென்று வந்த ராஜ தந்திரி!*

7 மணி நேரம் இடைவிடாது பேச்சு நடத்தி வெற்றி கண்ட மகா சூரர்! இஸ்ரேலின் நண்பர் என்று எகிப்து திட்ட, ரஷியாவுக்கும் எகிப்துக்கும் நண்பர் என்று இஸ்ரேல் குற்றம் சாட்ட இழுபறியாக இருந்த மத்திய கிழக்கு போரை ஓயாமல் பேசி ஒரு முடிவுக்கு கொண்டு வந்த வீராதி வீரர்!

இப்படியாக ஏராளமான புகழாரங்களுக்கு உரியவராக விளங்கும் அமெரிக்க வெளிநாட்டு இலாகா மந்திரி டாக்டர் ஹென்ரி கிஸ்ஸிங்கர் இன்று உலக அரசியலிலேயே ஒரு ஆச்சரியக் குறியாக காட்சி தருகிறார். அவரைப் பற்றி பரபரப்பான செய்திகள் பத்திரிகைகளில் வராத நாட்களே இல்லை.

அமெரிக்க ஜனாதிபதியின் புகழ் அதல பாதாளத்திற்கு போய்க் கொண்டிருக்க இவரது புகழ் மட்டும் மளமளவென்று ஏறிக்கொண்டிருக்கும் விந்தையைக் கண்டு உலகமே வியக்கிறது.

## ஒரே புதிர் மயம்!

அமெரிக்க ஜனாதிபதி நிக்ஸனின் நம்பிக்கைக்குப் பாத்திரமான நபர் உலகில் யாராவது உண்டா என்று கேட்டால் அவர் கிஸ்ஸிங்கர் தான் என்று அமெரிக்காவே கூறுகிறது. அப்படி இருந்தும் நிக்ஸனை வெறுக்கின்ற அமெரிக்க மக்கள் கிஸ்ஸிங்கரை வெறுக்காதது மட்டுமல்ல அவரை பாராட்டவும் செய்கிறார்கள் என்னும் போது அமெரிக்க மக்கள் மனநிலையை என்ன சொல்வது என்று வெளிநாட்டார் திகைக்கிறார்கள்.

கிஸ்ஸிங்கர் அண்மையில் டில்லி சென்றதும், பிறகு அங்கிருந்து பாகிஸ்தான் போனதும் நினைவிருக்கும் பாகிஸ்தான் போன கிஸ்ஸிங்கர் ஒரு நாள் வயிற்றுவலி என்று சொல்லி படுத்து அடுத்த நாள் யாருக்கும் தெரியாமல் ரகசியமாக பீகிங்போய் சேர்ந்தது உலக பரபரப்பை உண்டு பண்ணியது. இன்று அவரது நடமாட்டமே அரசியல்வாதிகளுக்கு ஆச்சரியம் தரக்கூடிய செய்தியாக இருக்கிறது.

இவர் பிரயாணம் செய்வது எல்லாம் ஜனாதிபதியின் சொந்த விமானத்தில், இந்த விமானம் எப்போது கிளம்புகிறது எங்கே போகிறது — எப்போது திரும்பும் என்பதெல்லாம் இவருக்கும் ஜனாதிபதி நிக்ஸனுக்கும் இன்னும் ஒரு சில ரகசிய பொலீஸ் அதிகாரிகளுக்கும்தான் தெரியும். கடந்த ஓர் ஆண்டுக்குள் இவர் 6 தடவை மாஸ்கோ போய் வந்திருக்கிறார். அதன் விளைவு இன்று ரஷிய அமெரிக்க உறவு மிக நெருக்கமாக வந்திருக்கிறது. யுத்த ஆயுத கட்டுப்பாடு என்று ஒரு ஒப்பந்தத்தை இவர்கள் செய்து கொண்டிருக்கிறார்கள். கண்டம் விட்டு கண்டம் தாக்கக் கூடிய ஏவுகணைகளும் இந்த ஒப்பந்தத்தின்படி ரகசியமாக இல்லாமல் இரு வல்லரசிடமும் தெரிந்த தகவல்களாக ஆகியிருக்கின்றன.

## திருமணத்திலும் இரகசியம்!

கிஸ்ஸிங்கர் இதோடு நிற்கவில்லை. ரஷிய-அமெரிக்க வர்த்தக உறவுக்கும் பாடுபட்டு ஓரளவுக்கு முன்னேற்றம் கண்டிருக்கிறார். இதனால் அமெரிக்க சாமான்கள் ரஷியாவுக்கு ஏராளமாக செல்லுகின்றன. ஆனால் ரஷியாவிலிருந்து அமெரிக்காவுக்கு அவ்வளவாக சாமான்கள் போகவில்லை, காரணம் ரஷியாவில் சாமான்கள் இல்லை.

எகிப்தோடு இவர் பேசி அரபு-இஸ்ரேல் யுத்தத்தை நிறுத்தியது மிகவும் போற்றக்கூடிய காரியம் ஆகும். ஆனால் சிரியாவோடு இவர் பேசிய பேச்சுக்கள் வெற்றி காண முடியவில்லை. இவர் எகிப்தியரோடு நெருங்கி வந்தது ரஷியருக்கே ஆச்சரியத்தை தந்திருக்கிறது; காரணம் ரஷியாதான் எகிப்துக்கு ஆயுத சப்ளை செய்கிற முக்கியமான நாடு; அமெரிக்காவோ இஸ்ரேலுக்கு ஆயுத சப்ளை செய்கிற நாடு. இந்த நிலையில் எகிப்தின் தலைவர் திரு. சதாத் எப்படி கிஸ்ஸிங்கரை வரவேற்கிறார் என்று ரஷிய அரசாங்கம் திகைக்கிறது.

இவ்வளவு கெடுபிடியான வேலைகளுக்கு இடையிலும் இவரைப் பற்றி மற்றொரு ருசிகரமான தகவல் ஒன்றும் வந்திருக்கிறது அதாவது அண்மையில் யாருக்கும் தெரியாமல் இவர் திருமணம் செய்து கொண்டார் என்ற செய்தியே அது. இவருக்கு மனைவியாக வந்திருப்பவரின் பெயர் நான்ஸி. நான்ஸிக்கும் இவருக்கும் நடைபெற்ற திருமணம் கடைசி வரை ரகசியத்தில் வைக்கப்பட்டிருந்தது கிஸ்ஸிங்கரின் உடன் பிறந்த அண்ணனுக்கும் கூட இது தெரியாதாம். அதேபோல நான்ஸியின் பெற்றோருக்கும் கடைசி வரை இந்த செய்தி தெரியாது; திடீரென திருமண செய்தி வந்து அமெரிக்காவே ஆச்சரியப்பட்டிருக்கிறது.

கிஸ்ஸிங்கரின் வயது 50. ஏற்கனவே ஒருமுறை திருமணம் செய்தவர். பிறகு தனிக்கட்டையாக பல காலம் இருந்தவர். இவருக்கு பல பெண்கள் சிநேகிதிகளாக இருந்தார்கள். ஆனால் இவர் விரும்பியது நான்ஸியைத்தான் நான்ஸிக்கு வயது 39 ஆகிறது பிரபல நியூயார்க் வக்கீல் ஒருவரின் மகள் இவர். கிஸ்ஸிங்கர் பேராசிரியராக இருந்தபோது அவரிடத்திலேயே இவர் மாணவியாக இருந்தவர் பல பட்டங்கள் பெற்றவர். பல துறைகளில் ஆராய்ச்சி நடத்தியவர் இத்திருமணத்திற்குப் பிறகு கிஸ்ஸிங்கர் தான் தங்கி வந்த சிறை வீட்டை காலி செய்து விட்டார். இப்போது நான்ஸியோடு பெரியதொரு பங்களாவில் குடியேறப் போகிறார்.

உலகத்திலேயே மிக சுறுசுறுப்பானவர் என்ற பேர் வாங்கி இருக்கும் இந்த ராஜ தந்திரி திருமணத்திற்குப் பிறகு எப்படி இருப்பார் என்று அமெரிக்காவில் பரவலாக கேள்விகள் கேட்கப்படுகின்றன.

— காண்டீபம்

● உங்கள் அச்சு வேலைகள் எதுவானாலும் கச்சிதமாக நாம் செய்து தருகிறோம்!

★ நம்பிக்கை —
★ நாணயம் —
★ மலிவு —
★ ஒழுங்கு
★ அழகான வேலை —

இவற்றுக்குச் சிறந்த இடம் சுதந்திரன் அச்சகம்!

இன்றே உங்கள் அச்சு வேலைகளுக்கு எம்மிடம் வாருங்கள்!

சுதந்திரன் அச்சகம்,
194 ஏ. பண்டாரநாயகா வீதி,
கொழும்பு-12.

# அக்காவைத் தேடுகிறேன்...!

எமது சிறுகதை

"அக்காவுக்கு என்ன வந்துவிட்டது? எப்ப பார்த்தாலும் மூஞ்சையை நீட்டிக்கொண்டு மூலையிலிருக்கத்தான் அவவுக்குத் தெரியும்! அம்மாவும் ஒவ்வொரு நாளும் அவவைப் 'பேசுவா' 'ஏனடி என்ரை வயித்திலை வந்து பிறந்தாய்? யாராவது மகராசன் வயித்திலை பிறக்காமல்; கொஞ்சம் நிறமா இருந்தாலாவது பரவாயில்லை. கறுத்த அவலட்சணப் பிண்டம். உன்னைக் கட்டிக்கொண்டு நான் ஒருத்தி மாரடிக்கிறன்'" என்று தொட்டதற்கெல்லாம் அவ அக்காவைப் 'பேசும்'போது எனக்கே அழுகை பொங்கிவரும்; அக்காவும் அழுதுகொண்டு உள்ளுக்கு ஓடிவிடுவா.

பாவம்; அக்காதான் என்ன செய்வா? பிறப்பிலே வந்த உருவத்தை அம்மா பேசிவிடுவதாலே நீக்கிவிட முடியுமா? என்ன! அம்மாவிலும் குற்றம் சொல்ல முடியாது. அன்றன்றைக்கு சந்தைக்குப் போய் ஏதாவது சாமான் வாங்கி விற்ருல் தான் அடுப்பு மூட்டலாம்; எனக்கும் அக்காவுக்குமாக அவதான் உழைக்கிரு. எங்கள் தந்தை நான் ஐந்து வயதாயிருக்கும்போதே தெருப்புக் காய்ச்சலாக இருந்து திடீரென இறந்து விட்டாராம். அவர் முகத்தைக்கூட எனக்குச் சரியாகத் தெரியாது. எனக்கும் அக்காவுக்கும் அம்மா, அப்பா எல்லாம் அம்மாவே தான்.

அம்மாவின் உழைப்பிலே தான் எனக்கு பள்ளிக்குப் பணம் கட்ட வேண்டும். சட்டை; காற்சட்டை; புத்தகச் செலவுகள் வேறு; அதற்கிடையில் அக்காவுக்கும் வயதாகிவிட்டது. கலியாணம் செய்து வைக்க வேணுமாம். அதுக்கு கையிலை காசிருந்தாலெல்லோ!

"நாங்கள் ஏழையள்: எங்களிட்டைப் பணமேது! ஏதோ ஆண்டவன் கண்முழிச்சாத்தான் இந்தப் பெண்ணுக்கு நல்லது நடக்கும்" என்று அம்மா அடிக்கடி சொல்லுவதைக் கேட்டிருக்கிறேன். ஆனல் அந்த ஆண்டவன் இன்றுவரைக்கும் கண்முழிச்சதாகக் காணேல்லை;

அக்காவுக்கு என் மீது எத்தனை அன்பு; என்ரை கனிசான் சட்டையள் எல்லாத்தையும் அவதான் தைச்சுத்தருவா; கணக்கு வாத்தியார் தாற கணக்கெல்லாம் அவதானே சொல்லித் தருவா; அக்கா இல்லாவிட்டால் தம்பிப்பிள்ளை வாத்தியாரிடம் எத்தனை குட்டு வேண்டியிருப்பேனே! ஐயையோ!. பயமாயிருக்கு அவர்தான் எத்தனை பொல்லாத மனிசர். ம்...... அக்காவைப் பற்றி பெல்லே சொன்னனுன்: அதுக்குள்ளை குறுக்கை இந்தக் கதையும் வந்திட்டுது:

ஆமாம்! குளிக்கையிக்கை சவுக்காரம் போடுறதும் சுடுதண்ணி வைச்சுத் தாறதும் அக்காதானே! அவ அழுகிறதைக் கண்டால் என்னால அழாமல் இருக்கமுடியுமா? நீங்களே சொல்லுங்கோ!

"ராஜா......! ராஜா...!" அக்காதான் என்னைக் கூப்பிடுகிரு.

"என்னக்கா? கூப்பிட்டனியே' என்றபடி குசினிக்கு ஓடினேன்.

அக்கா முகட்டை வெறித்துப் பார்த்தபடி குந்தியிருந்தா.

"ஆமடா ராஜா...... அம்மாஎங்கை போயிட்டா?"

அப்பொழுதுதான் எனக்கு அம்மாவின் ஞாபகம் வந்தது 'லாபபெண்ணை' வாங்கடபோன அம்மாவை இன்னும் காணேம்.

'இரக்கா! நான்வாறன்...' என்று சொல்லிவிட்டுக் கடையை நோக்கி ஓடினேன்.

அம்மாவை அங்கே காணவில்லை.!

'இவ எங்கை போயிருப்பா......? தம்பிப்பிளளை வாத்தியார் வீடு; சோமண்ணை வீடு, இப்படி அவ சாமான் கொடுக்கிற வீடெல்லாம் போய்ப்பார்த்தேன். அவவைக் காணவில்லை. எனக்குப் பயமாக இருந்தது. இருட்டு நேரம். முன் ஒருக்காலும் இப்படி அம்மா போறதில்லை. இன்றைக்குத்தான் இன்னும் ஆளைக் காணவில்லை;

எனக்கு விபரீதமான எண்ணங்கள் தோன்றத்தொடங்கின. அக்காவின்ரை கோபத்திலை அம்மா எங்காவது ஓடிப்போய்.........' சீ...... எங்களை விட்டிட்டு அம்மா போகமாட்டா. என்னிடம் அவவுக்கு எவ்வளவு பற்று' நான் நன்ருகப் படித்து உத்தியோகமானுப் பிறகு தான் தனக்கு எல்லாக் கவலையளும் தீரும் என்று எத்தனை ஆசையாகச் சொல்லிக் கொள்ளுவா. அவ என்னை விட்டுப்போகவே மாட்டா.

அம்மாவைச் சந்தையெல்லாம் தேடிவிட்டு வீட்டை நோக்கித் திரும்பி வந்துகொண்டிருந்தேன்.

தூரத்தில் யாரோ; கையில் போத்திலோடு போவது தெரிந்தது. அது.... ஆ... அம்மாதான்; அவவுக்கருகிலபோறது யாராயிருக்கும்?

விரைவாக நடந்து அவர்களை எட்டிவிட்டேன். இருட்டாயிருந்ததால் அவையள் என்னைக் காணேல்லை.

அம்மாவோடு ஏதோ கதைச்சுக்கொண்டு போறது ஆர்... ஓ அவர்...தரகர் தம்பையாதான். ஏதோ கலியாண விஷயமாமாயிருக்கும். இந்தத் தரகர் பேசிக்கொண்டு வாற கலியாணமெல்லாம் சீதன விசயத்திலை குழம்பிப் போய்விடும்; ஏழெட்டிடத்திலை அக்காவுக்கு மாப்பிளை பேசிவந்தார். எல்லாரும் கையிலை காசைக்குடு; பெண்ணை ஏற்றுக்கொள்ளுறம் என்று சொல்லுவினம். 'எங்களிட்டை எங்காலை பணம்' ஏதோ இருக்கிற இந்த ஒரு பரப்புக் காணியைக் கொடுக்கலாம் என்று அம்மா சொல்லுவா.

வந்தவை போனவைதான் திரும்பி வருவதில்லை.

இப்ப மறுபடியும் கலியாணப்பேச்சு போல கிடக்கு.

அம்மாவும் தம்பையரும் மெதுவாகக் கதைச்சுக்கொண்டு போறதைக் கண்டதும் நானும் அவர்களுக்குப் பின்னல் சத்தம்போடாமல் நடந்தன். இப்போ அம்மாவும் தம்பையரவும் பேசுவதைக்கொஞ்சம் கேட்கக் கூடியதாக இருந்தது.

"வயதும் கூடித்தான் போச்சுது. முந்தின தாரமும் செத்துப்போச்சு. ஆள் அவ்வளவு பிழையில்லை. காசும் கணக்குக்கேட்க மாட்டான். இருக்கிறதைக் குடுத்துச் சரிக்கட்டிப் போடலாம். உனக்கும் ஒரு தொல்லை தீர்ந்த மாதிரி. நீ என்ன சொல்லுருய்?' இது தரகர்.

'ஹூம்! எனக்கென்னவோ என்ரை மகளை இரண்டாந்தாரமாக் குடுக்கிறதுக்கு மனமில்லைத்தான். என்ருலும் வைச்சுக்கொண்டிருந்து என்னத்தைச் செய்யிறது. எங்கையாவது கட்டிவிடவேண்டியதுதான். அதுகளின்ரை தலைவிதி எப்படியோ அப்படி நடந்து துலைக்கட்டும்; நாங்களென்ன அள்ளிக்குடுத்து ஒரு கலியாணத்தைச் செய்ய என்ன காசுக்காரரே? ஏதோ பார்க்கவேண்டியது ஏரன் பெடியன் யாரெண்டு சொல்லுமன்' இது அம்மா.

'இவன்தான் செல்லத்துரை. ஊரிலை என்னத்தைச் சொன்னலும் ஆள் அருமையான பெடியன்...' தொடர்ந்தார் தரகர். எனக்கு அதற்குமேல் கேட்க விருப்பமில்லை. குறுக்கு வழியால் அம்மாவுக்கு முந்தி வீட்டை வந்துசேர்ந்தேன்

யார்? செல்லத்துரையா...! அந்தப் பாவிக்கா அக்காவைக் கட்டிக்கொடுக்கப் போகினம். இரண்டாந்தாரமென்ருலும் பரவாயில்லை.



நல்ல ஒழுக்கமானவனுயிருந்தால் செய்யலாம் இந்த அம்மாவுக்கு என்ன விசரா? பெத்தமகளை எங்கையாவது தள்ளிவிடப் பார்க்கிருவே. தரகரும் அம்மாவும் கதைத்துக்கொண்டுவந்ததை நினைக்க, எனக்கு ஆச்சரியமாக இருந்தது. வேதனையாகவும் இருந்தது. பாவம் அக்காவுக்கு இப்படியா தலைவிதி இருக்கவேணும்.

நான் சின்னவன் தானென்ருலும், பெரியவர்கள் செய்யிற பிழைகள் தெரியுந்தானே!

இந்தச் செல்லத்துரையைப் பற்றியும் எனக்குத் தெரியும்; அவன் செய்த கொடுமையாலேதான் முந்தின தாரமும் தனக்குமேலை மண்ணெண்ணை ஊத்தி எரிஞ்சுபோனது எண்டு ஊரிலை கதைக்கினம். இதை தெரிஞ்சுவைச்சுக் கொண்டு அம்மா பிறகும் அவனை அக்காவுக்குக் கட்டிக்கொடுக்க நினைக்கிருவே!

எனக்கு இது கொஞ்சமும் பிடிக்கவில்லை;

அக்கா அவனைக் கலியாணம் செய்துகொண்டு அழுறதிலும் பார்க்க வழக்கம போல வீட்டு மூலையிலிருந்து அழுவதுமேல். வீட்டிலை இருந்தால் எனக்கு உதவியாக இருப்பாவெல்லே?

வீட்டு வாசலுக்கு வந்ததும் அம்மா, 'ராசாத்தீ!... இனி உனக்கென்ன மவராணிதான்!' என்று சொல்வது கேட்டது. இன்றைக்குத்தான் அக்காவை 'ராசாத்தி' என்று பேர் சொல்லிக் கூப்பிட்ட அம்மாவைப் பார்த்தேன்: ஹூம் அம்மாவின் எண்ணம் எனக்கல்லவோ தெரியும்!

'அக்கா!'

'உம்'

'நான்தான்; ராஜா கூப்பிடுறன்.

'என்னடா? என்ன!... இந்த நடுராத்திரியிலை...'

'உனக்குக் கலியாணமாம்... அம்மா சொன்னுவே...!'

'உம்...'

அக்காவின் முகம் வெட்கத்தால் சிவந்திருக்கும். ஆனல் விளக்கு தூண்டப்படாததால் என்னால் அதைக் கண்டுகொள்ள முடியவில்லை. கண்டிருந்தாலும் அதை நான் வர்ணிக்கமுடியுமா...?

அக்காவிடம் செல்லத்துரையைப் பற்றிச் சொல்ல வேண்டும் என்று எண்ணிக்கொண்டு எழுந்து உட்கார்ந்தேன். அம்மா நன்ருகக் குறட்டைவிட்டுத் தூங்கிக்கொண்டிருந்தா. அவவுக்கு நிம்மதி. அக்காவும் விளக்கைத் தூண்டிவிட்டு எனக்கருகில் வந்து இருந்தா...

'அக்கா! உனக்கு செல்லத்துரையைத் தெரியுமோ?'

'ஓமடா... அவனுக்கென்ன...'

'அவனைப் பற்றி நீ என்ன நினைக்கிருய்...?'

எனது இந்தக்கேள்வியால் அக்காவுக்குச் சினந்தான் வந்தது. 'ஏன்ரா உனக்கு விழல் கேள்விகேட்க வேறை நேரம் அகப்படவில்லையோ? இதுதானு நேரம்' என்று சிடுசிடுத்தா... நானும் 'சும்மா கேட்கிறேன்... அதுக்கேன் என்னிலை கோவிக்கிருய். சொல்லன்... எல்லாம் விசயத்தோடை தான்' என்றேன்.

எனது இந்தப் பதிலால் சிறிது கலவரமடைந்த அக்கா; அதை வெளியே காட்டிக்கொள்ளாமல், 'அவனு பெண்பித்தன்; முதல் மனைவியை இழந்தவன்... இவைதான் எனக்குத் தெரியும்!'

'அவனுக்கு இன்னெரு மனைவி கிடைக்கப் போகிருள் அது தெரியுமோ உனக்கு...?'

'தெரியாதே...' அந்தப் புண்ணியவதி யாரடா; அந்த மனிதனுக்கு வாழ்க்கைப்படப் போகிறவள்?' தன்னைப் பற்றியே சிந்திக்காமல் அக்கா இப்படிக் கேட்டா.

அக்காவிடம் 'நீதான் அந்தப் புண்ணியவதி!' என்று கூற அச்சமாக இருந்தது. நேரடியாகக் கூறுமல் கதை வைவளர்த்தேன்.

எனக்கென்னவோ அக்கா அவனைக் கலியாணம் செய்யக்கூடாது என்னும் நினைப்பே மேலோங்கி இருந்தது.

'அந்தப் பெண் ஒரு ஏழை. வாழ வழியற்றவள்! அதோடு அழகும் குறைந்தவள்...'

'என்னடா புதிர் போடுகிருய். நேரடியாகக் கூறுவதுதானே' என்று இரைந்தா. இப்பொழுது அக்காவுக்குச் சந்தேகமேற்பட்டிருக்கவேண்டும். அவவது குரலில் பதட்டம் இருந்தது:

'ஆமக்கா! என்னைப்போல ஒரு தம்பியும் அந்தப் பெண்ணுக்கு உண்டக்கா...? எனக்கு இதைச் சொல்லும் போது அழுகை வந்துவிட்டது.

அக்காவுக்குப் புரிந்து போயிற்று;

என்னைக் கட்டிக்கொண்டு அழுதா. 'அவனுக்கு வாழ்க்கைப்படுவதிலும் பார்க்க ஒரு கழுதையைக் கட்டிக் கொள்ளலாம்' என்று அக்கா கடைசியாகச் சொன்னு.

இரவு முழுவதும் அவ அழுதுகொண்டிருந்தா. நானும் அவவோடு சேர்ந்து கொஞ்ச நேரம் அழுதேன் பிறகு நான் நித்திரையாய்ப் போய்விட்டன்.

'ராசாத்தீ... ராசாத்தீ...' அம்மா அவலமாகக் கூப்பிடுவது கேட்டு நான் விழித்துக்கொண்டேன்;

சூரியன் அடிவானில் மெதுவாகத் தலையை நீட்டிப் பார்த்தான். அக்காவின் படுக்கையை நான் அப்போதுதான் பார்த்தேன். அங்கே அது வெறுமையாகக் கிடந்தது.

'ஐயோ! அக்காவைக் காணேமே! அம்மா அவலமாகக் கூப்பிடுவது என்ன காரணமோ! என்னையும் அம்மாவையும் விட்டிட்டு அவ எங்கை போயிருப்பா?'

அம்மாவும் நானுமாக அவவைத் தேடாத இடமேயில்லை. எங்கேயும் அக்கா அகப்படவில்லை.

இன்றும்;

கோயில்; குளம்; சத்திரம்; தெருக்கள் எங்கும் தேடுகிறேன். ஏழைப் பெண்களைக் காணும் போது எனக்கு அக்காவின் ஞாபகந்தான் வரும். நின்று, அவர்களைக் கூர்ந்து பார்த்துவிட்டுத்தான் செல்கிறேன். அவர்களில் எனது அக்காவும் இருக்கமாட்டாவா என்னும் ஆதங்கம் எனக்கு!

(யாவும் கற்பனை)

'சர்வசித்தன்'

## 'குமணனுக்கு' வெற்றி!

புத்தூர் அற்புதாலயாவினரின் குமணன் நாடகத்துக்கு வெற்றிக்குமேல் வெற்றி கிடைத்து வருகிறது; ஏற்கெனவே 9 தங்கப்பதக்கங்களை பெற்றுள்ள இந்நாடகம். அண்மையில் அரியாலை நடைபெற்ற அரியாலை 55 வது சுதேச திருநாள்கொண்டாட்ட நாடகப் போட்டி, பருத்தித்துறை பொலிஸ் பொதுமக்கள் கூட்டுறவில் நடத்தப்பட்ட நாடகப் போட்டி, பலாலி உதய கலைவாணி ச. ச. நிலையத்தினரால் நடாத்தப்பட்ட நாடகப்போட்டி, ஆகிய மூன்றிலும் பங்குபற்றி முதலாவது இடத்தைப் பெற்றுக்கொண்டது, சிறந்த நாடகமாக தெரிவுசெய்யப்பட்டது. இதில், அசோதிகுமரர், என். செல்வம், கே. சிவம், ஜி. சதானந்தன், வி. செல்லமுத்து, பி. கந்தையா ஆகியோர் நடித்தனர்; கதாபாத்திரமாக நடித்த கலைஞர் என். றிச்சட் டைரக்ஷன் பொறுப்பையும் ஏற்றிருந்தார்.

முழுக்க முழுக்க பழையபாணியில் அமைந்துள்ள இந்நாடகத்தைப் புதிய முறையில் மேடையேற்றியவர் கலைஞர் எம். அற்புதசிங்கம் அவர்களாவர். இந்நாடகம் விரைவில் கொழும்பிலும் மேடையேறவிருக்கிறது

# கேட்டதும் அறிந்ததும்

—அபிவியக்தன்—

## கம்யூனிஸ்டுகளின் பிறவிக் குணம்!

கூட இருந்து குழிபறிப்பதும், நண்பர்களாக நடித்துக் கொண்டே முதுகில் குத்துவதும் கம்யூனிஸ்டுகளின் கூடப் பிறந்த குணங்கள். இந்த நியதிக்கு 'முற்போக்கு' எழுத்தாளர்கள் என்ற போர்வையில் இயங்கும் ஈழத்து கம்யூனிஸ்ட் எழுத்தாளர்கள் விதிவிலக்கல்ல என்பதற்கு முன்னர் அவர்கள் நடத்திய 'கூழ்முட்டை' போராட்டமே தக்க சான்று.

இப்போதும் அந்தக் கழுத்தறு படலம் தொடர்ந்து கொண்டேயிருக்கிறது. ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் உயர்பதவிவகித்து, பின்னர் அதிலிருந்து தூக்கியெறியப்பட்டு, மறியல் சென்று மீண்ட முற்போக்கு 'சோத்தி' மரம் ஒன்று இப்போது—அரசாங்கத்தின் உயர்மட்டத்திலுள்ள புளியங்கொப்பு ஒன்றைப் பிடித்துக்கொண்டு, அந்த திமிரில் தலைகீழ் தெரியாமல் ஆட்டம்போட்டுவருகிறது. இசைமேதை ரவிசங்கரைவிட தனக்குத்தான் இசை தெரியும் என்று காட்டுவதற்கு அண்மையில் முயற்சித்தது. அற்பர்களுக்கு பவிசுவந்தால் என்ன செய்வார்கள் என்பது உலகமறிந்த விடயம்!

இப்போது இந்த 'சோத்தி' மரம், இலங்கை வானொலியின் தமிழ்ப் பகுதியை குத்தகைக்கு எடுத்துக்கொண்டிருக்கும் 'முற்போக்கு' கலாநிதிகளின் மீதே வாய்வைக்கத் தொடங்கிவிட்டது!

இதில் ஆச்சரியமென்ன? கம்யூனிஸ்டுகளின் பிறவிக் குணமே நண்பர்களாக நடித்துக்கொண்டே கழுத்றுப்பதுதானே...!

## இவரும் எழுத்தாளராம்!

கொழும்பு பேராவை நடத்திவரும் 'வயிற்றுப் போக்கு' வைத்தியர் ஒருவர், தம்மையும் ஒரு பெரிய எழுத்தாளர் என்று காட்டிக்கொள்வதற்காக அரசின் ஊதுகுழல்களான நாளேடுகளில் அறிவியல் கட்டுரைகளை எழுதிவருவதை வாசகர்கள் கவனித்திருப்பார்கள். இந்த அறிவியல் கட்டுரைகள் அவரது சொந்தச் சரக்கல்லவாம்! வெளிநாடுகளிலிருந்து தருவிக்கப்படும் ஆங்கிலச் சஞ்சிகைகளிலிருக்கும் கட்டுரைகளை அப்படியே எழுத்துக்கு எழுத்து மொழிபெயர்த்து தனது பெயரில் போட்டுவிடுகிறார் இவர்! மூலக் கட்டுரை வெளிவந்த பத்திரிகையின் பெயரை கட்டுரையின் இறுதியில் குறிப்பிடுவதும் இல்லை! இவரையும் ஒரு எழுத்தாளர் என்று கூறுவது தமிழ் எழுத்தாளர்கள் அனைவருக்குமே அவமானம்!

## பிஜித் தீவிலும் தமிழ்ப் பகைவர்கள்..!

31-3-1974 அன்று சென்னை பெரியார் திடலில் நடைபெற்ற தமிழர் தந்தை செல்வா அவர்களின் 76வது பிறந்த நாள் விழாவில் பேசிய பிஜித் தீவைச் சேர்ந்த திரு. க. அப்பாபிள்ளை அவர்கள், தமிழக முதல்வர் கருணாநிதிக்கு பின்வரும் வேண்டுகோளை விடுத்தார்:- திரு. அப்பாபிள்ளையின் முகவரி:- FIJI SAMARASA SUTHA SANMARGA SANGAM, P. O. BOX 779, SUVA, FIJI.

பீசித் (FIJI) தீவிலுள்ள தென்னிந்திய மக்கள் தமிழைக் கற்க விரும்புகிறார்கள். சுமார் நாற்பது ஆண்டுகட்கு மேலாகப் பீசித் தீவிலுள்ள தென்னிந்திய மக்களிடம் தொடர்புகொண்டு முத்தமிழைப் பரப்பி வருகிறோம். ஆனால், ''சுவாமி உருத்திரானந்தா'' என்ற இராமகிருட்டிண மடத்தைச் சேர்ந்த துறவியால் அங்கே நடக்கும் தமிழ்த் தொண்டு அழிந்தவருகிறது.

பிஜித் தீவில் வட இந்தியர் பெரும்பான்மையினராக இருப்பதால் இந்த உருத்திரானந்தா தமிழ்ப் பகைவர்களுடன் சேர்ந்துகொண்டு 50 ஆண்டுகட்கு மேலாகப் பீசித் தென்னிந்திய மக்கள் போற்றிக் காத்து வந்த பிஜி தென்னிந்திய சன்மார்க்க ஒன்றிய கழகத்தை ஒழித்துவிட்டு அந்தக் கழகத்திற்கு உரிமையான கோயில், நூலகம், சாரதா தமிழ் அச்சகம், பல கட்டிடங்கள், கழகத்தைச் சார்ந்த 1250 ஏக்கர் நிலம் முதலிய உடைமைகளை எல்லாம் இராமகிருட்டிண மடத்தின் பேருக்கு மாற்ற முயற்சிசெய்து சிலவற்றை மாற்றியும்விட்டனர். மேலும் மாற்ற முயலுகின்றனர்.

வழக்கு மன்றத்தில் வழக்கு போடுவோமென்று தெரிந்தவுடனே கழகத் தொடர்பான பதிவுத்தாள்களும், கணக்குகளும் எரிக்கப்பட்டுவிட்டன. இவர் மக்களின் வெறுப்புக்காளானார். உடனே அவ்விடத்திலுள்ள குசராத்திய வணிகர்களுடன் சேர்ந்துகொண்டு கழகத்திற்கு எதிர்ப்பாகத் தமிழ் வளர்ச்சியை எதிர்த்து வேலைசெய்துவருகிறார்.

### இன்று உள்ள நிலை

இன்று பீசியில் வாழும் தமிழர்களுக்குத் தமிழ் தெரியாது. இந்தியைப் பொதுமொழியாக ஆக்கிவிட்டனர். இதனால் தமிழர் தங்களின் தொன்மையான வளம் நிறைந்த தமிழ்மொழியை மறந்துவிட்டனர்; பண்பாட்டையும் மறந்துவிட்டனர். இந்த அவல நிலையைப் போக்கி தமிழர்களுக்குத் தமிழ் உணர்வு, கலை உணர்வு, பண்பாடு ஆகியவற்றை உணர்த்தித் தமிழர்களாக்கச் சென்ற ஏழு ஆண்டு காலமாகப் பீசி சமரச சுத்த சன்மார்க்க கழகத்தைத் தொடங்கியுள்ளோம். இதன் வாயிலாகத் தென்னிந்தியர் சிறிது விழிப்படைந்துவருகின்றனர். மேலும் இங்குள்ள தமிழர்கள் தமிழர்களாக விளங்கத் தாங்கள் தங்களின் நல்லுதவிகளையும், அறிவுரைகளையும் தந்து எங்கள் அமைப்பை ஊக்குவிக்குமாறு வேண்டுகிறோம்.

—தகவல்:- 'மலைச்சாரல்'

# மலையகத் தமிழர் இன்னல் துடைத்திட வாரி வழங்குவீர்!

சுமார் நாலு மாதங்களாக மலைநாட்டுத் தோட்டத் தொழிலாளர்கள் பசிப்பிணியால் துன்பமுற்றும், உடுப்பதற்கு போதிய உடையின்றியும், மழை, பனி குளிரால் தாக்குண்டு அல்லற்பட்டும், பலர் நோய் வாய்ப்பட்டு வருவதும் இந்நாட்டு மக்களுக்கு நன்கு தெரிந்ததே. அவர்கள் நிலைதிருந்துமென இத்தனை மாதங்களாக நம்பியிருந்தோம். ஆனால் அன்னாரின் நிலை மேன்மேலும் கெட்டுக்கொண்டு போவதையே நாம் காண்கின்றோம். இதைக் கண்டும் அந்த சகோதரர்களுக்கு நாம் நெகிழ்ந்து இரங்காதிருப்பது நாகரிகமாகாது. இரங்குதலே கண்ணோட்டம் என்பர்.

'உண்டி கொடுத்தோர் உயிர்கொடுத்தோரே' என்ற உயர்ந்த பண்பாட்டினையுடைய கொள்கைக்கு அமைய, கீழ் கைசொப்பமிட்டிருக்கும் நாம் நீங்களனைவரும் அந்த திக்கற்றவர்களுக்கு பொருள் உதவி செய்து அவர்களின் உயிர்களைக் காக்கவேண்டுமென்று மன்றாடுகிறோம். அந்தப் பசியைத் தணிக்க மனங்கனிந்து உதவும் தர்மப் பொருளே எமது உண்மையான தேட்டம். இதைத்தான் வள்ளுவர் பெருந்தகையும்:

''அற்றாரழிபசி தீர்த்தல் அஃதொருவன் பெற்றான் பொருள்வைப் புழி''

எனக் கூறியருளினார்.

பணம் முதலாயபொருள், வேலை வாய்ப்பு அல்லது உழைப்பு இல்லாத இந்த ஏழை மக்களுக்கு இறைவன் எமக்களித்த பொருளில் ஒரு சிறு பங்கை யாகுதல் உவந்தளித்து அவர்களுக்கு ஒரு நல்ல கதியைக் காட்டுவோமாக. நீங்களனைவரும் வழங்கும் தானத்தை ஏற்று அந்த ஏழை மக்களுக்கு விநியோகம் செய்யும் பொறுப்பை ஏற்று நிற்கிறோம். உபகரிக்கப்படும் பொருள்களுக்கு பற்றுச் சீட்டுத் தலைவர் டாக்டர் வி. ரி. பசுபதியினாலும், இணை பொருளாளரும் செயலாளருமான திரு. சி. பொன்னையாவினாலும் கைச்சாத்திட்டு வழங்கப்படும்.

—இவ்வாறு யாழ்ப்பாணத்தில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள மலையகத் தோட்டத் தொழிலாளர் நிவாரண சபையின் சார்பில் வெளியிடப்பட்ட அறிக்கையில் பொது மக்களுக்கு வேண்டுகோள் விடப்பட்டுள்ளது.

இந்த அறிக்கையில் டாக்டர் வி. ரி. பசுபதி (கஸ்தூரியார் வளவு, யாழ்ப்பாணம்) சட்டத்தரணி ஏ. வி. குலசிங்கம், யாழ் ஆயர் வணக். வ. தியோகுப்பிள்ளை ஜே. ஜே. ஞானப்பிரகாசம், (யாழ் ஆச்சிக்கன்) டி. ஜே. அம்பலவாணர் (தென்னிந்தியதிருச்சபை—யாழ் அத்தியட்சகர்) சி. பொன்னையா—சட்டத்தரணி (இணைப் பொருளாளர், திருநெல்வேலிவடக்கு, யாழ்ப்பாணம் ஆகியோர் ஒப்பமிட்டுள்ளனர்.

## இலங்கைத்...

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

registered will, if his mother-tongue is an Indian language, he presumed to be an illicit immigrant from India and liable to deportation and the Indian High Commissioner will extend all facilities for implementation of such deportations. (2)

இந்த ஓரவஞ்சனையான வாசகத்தை இந்திய அரசு ஒப்புக் கொள்வதை என்னென்பது? இந்திய அரசும் அதன் முடியும் அடியுமான நேருவும் இதைவிட இலங்கைத் தமிழர்க்கு வேறு எந்த வகையில் கொடுமை யிழைக்க முடியும்? இதே ஒப்பந்தம், இன்னும் சொல்கிறது: இலங்கை அரசு அதன் குடியேற்ற மக்களைப் பற்றிய திருத்த மசோதாவை (Immigrants and Emigrants Amendment Bill) நிறைவேற்றிக் கொள்ளலாம். குடியுரிமை பெறத் தகுதியிழந்தவர்களைப் பற்றி திருப்தியடைய இந்தியத் தூதருக்கு வாய்ப்பளிக்கப்படும். ஆனால் கடைசி முடிவு இலங்கை அரசினுடையதாம்!

The Government of Ceylon may proceed with the Immigrants and Emigrants Amendment Bill which throws on the accused the onus of proof that he is not an illicit immigrant; but before that the Government of Ceylon will give an opportunity to the Indian High Commissioner to satisfy himself that a prima facie case exists such prosecution, that final decision being that of the Government of Ceylon. (3)

இந்த ஒப்பந்தம் இலங்கைத் தமிழர்க்குப் பாதகமானதும், இந்திய அரசின் அறிவீனத்தைக் காட்டுவதாகவும் உள்ளது என்று டெல்லிப் பல்கலைக் கழகப் பேராசிரியர் பெய்ன்ஸ் (J. S. Bains) அவர்கள் தமது நூலில் (India's International Disputes — A Legal Study) விமர்சித்துள்ளார். திரு. கொந்தாபி (C. Kondabi), அவர்கள் தம் நூலில் (Indians Overseas), 'நேருவின் இந்திய இலங்கை ஒப்பந்தம் பிரச்சினையின் காரணங்களை அறியாதது' என விளக்கியுள்ளார். இவ்விரு அறிவாளர்களும் வடவரே! தமிழர் அல்லர்!

— வளரும்

## இலங்கை இலக்கிய பேரவை அங்குரார்ப்பணம்

இலங்கை இலக்கியப் பேரவை அங்குரார்ப்பணக் கூட்டம் யாழ் பொது சன நூலக மேல் மாடி கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

கீழ்கரவை பொன்னையன், நெல்லை க. பேரன், நந்தினி சேவியர், புதுவை இரத்தின துரை ஆகியோர் கருத்துரை வழங்கினார்கள். முடிவில் பின்வருவோர் நிர்வாகிகளாக தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்:- மா. குலேந்திரன் உபதலைவர்கள்:- ந. சந்திரமோகன், திரு. செ. சிவபாலசுந்தரம், செயலாளர் கீழ்கரவை பொன்னையன், உபசெயலாளர்:- ந. லோகேந்திரலிங்கம் பொருளாளர்:- செல்வி கமலசினி மாணிக்கவாசகர் உபபொருளாளர்:- இ. பகதீஸ்வர ஐயர்.

## சட்டத்தை...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சுவர்களில் அரசாங்கத்திற்கு விரோதமான சுலோகங்களை எழுதினார்கள் என்ற சந்தேகத்தின்பேரில் அவசரகாலச் சட்டத்தின் கீழ் பொலிசார் கைதுசெய்தனர். அவர்கள் அனைவரும் தற்போது விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

''அவசரகாலச் சட்ட விதிகளின் கீழ் குற்றம் என்று கருதப்படும் துண்டுப்பிரசுர விநியோகத்தை இன்று (திங்கட்கிழமை) நானும், தமிழர் கூட்டணியின் ஏனைய தலைவர்களும் தொண்டர்களும் நடத்தினோம்.

''நாம் இன்று யாழ் பொலீஸ் அதிபருக்கு இப்படியான சட்ட விரோதமான காரியத்தை செய்யப்போகிறோம் எனக் கூறிவிட்டு இந்த சட்டமறுப்பில் இறங்கினோம் நாம் எங்கு வைத்து இச் சட்டமறுப்பை நடத்த விருக்கிறோம் என்பதையும் முன் கூட்டியேபொலீஸ் அதிபருக்கு தெரிவித்திருந்தோம்.

அவசரகாலச்சட்ட விதிகளின் கீழ் அவ்வாறு செய்யக் கூடாதெனவும் செய்தால் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் எச்சரித்தார்.

நாங்கள் இதனைச்பொருட்படுத்தாமல் யாழ்ப்பாண நகரில் துண்டுப்பிரசுரங்களை விநியோகித்தோம். பொலிசார் அங்கு வந்து நின்று நடப்பவற்றை கவனித்தார்களே தவிர எம்மை கைது செய்யவோ, வேறு நடவடிக்கைகள் எடுக்கவோ இல்லை.

''அவசரகாலச்சட்ட விதிகளின் கீழ் பொலீஸ் மாஅதிபரின் அனுமதிபெறாமல் இப்படித் துண்டுப்பிரசுரங்களை விநியோகிக்க முடியாது இருந்தும் சட்டத்தை மீறிய எம்மீது, பொலிசார் சட்டத்தைக் கடைப்பிடித்து நடவடிக்கை எடுக்காமல் பார்த்துக்கொண்டிருந்தார்கள்.

''இப்படியே இதற்கு முன்பும் பல தடவைகள் நடந்திருக்கிறோம். பொலிசார் நடவடிக்கை எடுக்கவில்லை. இளைஞர்கள் இம்மாதிரியான செயல்களில் ஈடுபடும்போது மட்டும், பொலிசார் அவர்களைச் கைதுசெய்கிறார்கள். தலைவர்களைப் பொறுத்தவரை மௌனம் சாதிக்கிறார்கள். சட்டத்தின் முன்னிலையில் இப்படியான பாகுபாடு ஏனோ தெரியவில்லை!''

## ஞானப்பிரகாச...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கல்வி வெளியீட்டுக் கழகத்தினரின் இச்செயல் பொதுவாக தமிழ் மக்கள் மத்தியிலும் சிறப்பாக கிறிஸ்தவர்கள் மத்தியிலும் பெரும் கொதிப்பை ஏற்படுத்தியுள்ளது.

''இடாம்பீக வாழ்வு கொண்டுவரும் தாழ்வு.'' ''சிக்கனமே சிறந்த செல்வம்.''

சிக்கன சலவைக்கு மில்க்வைற் சலவைப்பவுடர்.

மில்க்வைற் சலவைப்பவுடர் ஆச்சரியப்படத்தக்க முறையில் ஆடைகளின் அழுக்கை மின்வேகத்தில் அகற்றுகிறது. இன்றே வாங்கிபாவியுங்கள்.

மில்க் வைற் சவர்க்காரத் தொழிலகம்,
த. பெ. எண். 77, யாழ்ப்பாணம்.

# 'ஜனவேகத்'தின் திமிர்வாதம்!

## வெள்ளவத்தை ஆலைத் தொழிலாளரின் வயிற்றிலடித்தவர்கள்

## சுதந்திரன் ஊழியர்களுக்காக கண்ணீர்விடும் மாய்மாலம்!

தமிழர் தந்தை செல்வா அவர்களை தொழிலாளர்களின் விரோதி போலவும், சுதந்திரன் நிறுவனத்தில் வேலைசெய்யும் தொழிலாளர்கள் ஏதோ பயங்கரமானமுறையில் கொடுமைப் படுத்தப்படுவது போலவும் பொதுமக்களுக்கு சித்திரித்துக்காட்டும் முயற்சியில் நேற்றுப் பெய்யத் தொடங்கிய போலிச் சோசலிசம் என்ற மழையில் இன்று முளைத்த ஆளுங்கட்சியின் காளான் ஏடாகிய 'ஜனவேகம்' இறங்கியுள்ளதால், அந்தப் பொய்ப் பிரச்சாரத்தைக் கிழித்து— முகமூடியைப் பிய்த்தெறிந்து உண்மை நிலையை தமிழ்ப் பொதுமக்களுக்குதெரிய வைப்பது நமது கடமையென்று கருதுகிறோம்.

இன்றைக்கு முற்போக்கு, சோசலிசம் என்றெல்லாம் பேசி வருபவர்கள் யார்? அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்காக தொழிலாளர்களை ஏணிகளாக்கி — பகடைக் காய்களாக்கி —அவர்களின் முதுகின் மீது சவாரி செய்துவந்தவர்கள் தான் இவர்கள்! தொழிலாளர்களை முதலாளிகளின் நிரந்தரப் பகைவர்களாக்கி— தொழில் நிறுவனங்களில் முதலாளிகளுக்கும் தொழிலாளிகளுக்குமிடையே நிரந்தர பிரிவையும் மோதுதலையும் உண்டாக்கி— அதிலே குளிர் காய்ந்தவர்கள்தான் இன்றைக்கு தொழிலாளர்களை பயன்படுத்தி— அவர்களை ஏமாற்றி — அரசு கட்டிலில் ஏறி இருக்கிறார்கள்!

தொழிலாளர்களின் 21 அம்சக் கோரிக்கைக்காக இறுதிவரை போராடுவோம் என்றவர்கள் இன்று பதவிக்குவந்தபின் 21 அம்சமா? அப்படியானால் என்ன? என்று ஏதோ ஒன்றும் புரியாதவர்கள்போல மாய்மாலம் பண்ணுகிறார்கள்!

நியாயமான கோரிக்கைகளுக்காக வேலைநிறுத்தம் செய்த வங்கி ஊழியர்களை பழிவாங்கினார்கள்!

வெள்ளவத்தை நெசவு ஆலை நிறுவனத்தில் வேலைசெய்த ஆயிரக்கணக்கான தொழிலாளர்களுக்கு, முதலாளிகளுடன் சேர்ந்து கொண்டு வயிற்றிலடித்தார்கள்! வேலைக்கு எடுத்த பழைய ஊழியர்களைக்கூட புதிய ஊழியர்களாகவே பதிந்தார்கள்,

இத்தனைக்கும் இந்த ஆலையில் பாதிக்கப்பட்ட தொழிலாளர்கள் அனைவரும், அரசாங்க ஆதரவுத் தொழிற்சங்கங்களை சேர்ந்தவர்கள்! ஆம் — தங்கள் தொழிற்சங்கங்களை சேர்ந்த தொழிலாளர்களுக்கே, முதலாளிகளுடன் சேர்ந்துகொண்டு வயிற்றிலடித்தவர்கள்தான் இன்றைக்கும் போலிச் சோசலிசம் பேசிக்கொண்டு நாட்டு மக்களை ஏமாற்றி வருகிறார்கள்—

இப்படிப்பட்டவர்கள் தான் தந்தை செல்வாவை 'முதலாளி' என்கிறார்கள்! தொழிலாளர்களின் விரோதியென்று கதை கட்டப் பார்க்கிறார்கள்!

தந்தை செல்வா தொழிலாளர்களை ஏணிப்படிகளாக்கி அவர்கள் மீது ஏறி நின்று தன்னுடைய அந்தஸ்தை உயர்த்திக்கொண்டவரல்லர்!

கொழும்பில் 40 வருடங்களுக்குமேலாக வாழ்ந்தும் சொந்த வீடு கூட இல்லாமல் வாடகை வீட்டில் குடி இருப்பதுதான் முதலாளிக்குரிய வரைவிலக்கணம் என்றால் — நாளாந்த பாவனைக்கு நல்லதொரு கார்கூட இல்லாமல் ஓர் 'ஓட்டை உடைசல்' காரை வைத்துக்கொண்டு காலத்தையோட்டுவதுதான் முதலாளிக்குரிய இலட்சணம் என்றால் — தந்தை செல்வாவும் அவர்கள் கூறுவது போல ஒரு முதலாளிதான் என்பதை ஏற்றுக்கொள்ளுகிறோம்!

முதலாளித்துவக் கட்சியென்று சொல்லப்படும் யூ. என். பி. ஆட்சி 10 இலட்சம் மலைநாட்டுத் தொழிலாளர்களின் குடியுரிமை வாக்குரிமைகளைப் பறித்தபோது —அதை எதிர்த்து முழக்கமிட்டவர் தந்தை செல்வா! அதே வேளையில் அத்தொழிலாளர்களின் உரிமை பறிக்கப்படுவதை ஆதரித்தவர்கள் காலஞ்சென்ற திரு பண்டாரநாயகாவும் அவரது தோழர்களும் அப்படிப்பட்ட பண்டாரநாயகாவின் அடிவருடிகளே இன்று தந்தை செல்வாவை நாக்கூசாமல் 'முதலாளி' என்று எழுதுகிறார்கள்!

தந்தைசெல்வா அவர்கள் சுதந்திரன் நிறுவனத்தின் நிர்வாக இயக்குனராக இருந்து 1947ம் ஆண்டு தொடக்கம் இன்றுவரை — கடந்த 27 ஆண்டுகளாக சுதந்திரன் பத்திரிகையை பல வித கஷ்டங்களுக்கும் தொல்லைகளுக்கும் மத்தியில் நடத்திவருகிறார் என்றால் அது தமிழ் சமுதாயத்துக்காகத்தானே தவிர தனக்கு எவ்வித பொருளாதார ஆதாயத்தைக் கருதியும் அல்ல! சுதந்திரனை நடத்துவதில் அவர் அடைந்துள்ளது பல இலட்சக் கணக்கான ரூபாய்கள் நட்டமே! தவிர—சுதந்திரனால் பொருளாதார ரீதியில் அவர் ஒரு சதமேனும் இலாபம் அடைந்தவர் அல்லர்! தொழிலாளர்களைச் சுரண்டியவரும் அல்லர்! இதை சுதந்திரனில் வேலை செய்துவரும் பழைய ஊழியர்கள் அனைவருமே ஒப்புக்கொள்வர்!

தந்தை செல்வா அவர்கள் முழுக்க முழுக்க ஓர் ஜனநாயகவாதி! ஜனநாயக தர்மத்தை சொந்த வாழ்விலும் பின்பற்றுபவர்—என்பதற்கு சுதந்திரன் நிறுவனத்தை அவர் நடத்திவந்தமுறையே தகுந்த எடுத்துக் காட்டு!

ஓர் அரசியல் கொள்கை சார்பான பத்திரிகையில் மற்றோர் அரசியல் கொள்கை சார்பானவர்களை ஒரு போதும் வேலைக்குசேர்த்துக் கொள்ள மாட்டார்கள்!

உதாரணமாக ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி சார்பான பத்திரிகையில், கம்யூனிஸ்டுகளோ, யூ.என்.பி.யினரோ, சமசமாஜிகளோ வேலைக்கு சேர்த்துக்கொள்ளப்பட மாட்டார்கள். அதே போல—

யூ. என். பி. பத்திரிகையில் ஏனைய கட்சிகளின் ஆதரவாளர்கள் சேர்த்துக் கொள்ளப்படமாட்டார்கள். ஏன், ஐக்கிய முன்னணியில் இணைந்திருந்தாலும் கூட —கம்யூனிஸ்ட் பத்திரிகையொன்றில் சமசமாஜக் கட்சி ஆதரவாளரை வேலைக்கு எடுத்துக்கொள்ளமாட்டார்கள்!

ஆனால் தந்தை செல்வாவின் ஜனநாயக உள்ளம், குறுகியதல்ல—மிகவும் விரிந்தது. அதனால் சுதந்திரன் நிறுவனத்தில் — சுதந்திரன் பத்திரிகை பின்பற்றும் அரசியல் கொள்கைக்கு முரண்பட்டவர்களுக்கு கூட —மாற்றுக் கட்சிகளின் ஆதரவாளர்களுக்கு கூட — வேலை தரப்பட்டது! சுதந்திரனின் கொள்கைக்கு முரண்பட்ட அரசியல் கொள்கைகளைப் பின்பற்றுபவர்களாக இருந்தாலும் வேலை செய்யும் இடத்துக்கு அத்தொழிலாளர்கள் விசுவாசமாக நடப்பார்கள் என்பதே தந்தை செல்வாவின் நம்பிக்கையாகும். இதன் காரணமாகவேதான் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி ஆகியவற்றின் அனுதாபிகளுக்கும் ஆதரவாளர்களுக்கும் கூட சுதந்திரனில் வேலை செய்யும் வாய்ப்புக் கிடைத்தது!

ஆனால்—அரசாங்க ஊதுகுழலாகி விட்ட ஏரிக்கரை நிறுவனத்தில் இப்போது என்ன நடக்கிறது? அரசாங்கத்துக்கு விரோதமானவர்கள் என்று கருதப்படும் ஊழியர்கள், திடீர் திடீரென்று எந்தவித நிவாரணமுமின்றி அங்கிருந்து கழுத்தைப் பிடித்து வெளியேற்றப்படுவதாக கூறப்படுகிறதே.

இது ஒன்றே செல்வாவின் பெருந்தன்மையையும் ஆட்சி பீடத்திலுள்ளோரின் குறுகிய போக்கையும் எடுத்துக் காட்டுகிறதல்லவா?

மற்றொன்றையும் இங்கு நாம்சுட்டிக் காட்டவேண்டும். தமிழினத்தின் அரசியல் உரிமைகளைக்கோரும் தந்தை செல்வாவை வகுப்புவாதியென்றும், இனவெறியர் என்றும் தூற்றுகிறார்கள்; அப்படித் தூற்றுகிறவர்களின் அரசாங்கமோ— வேலை வழங்குவதில் —பல்கலைக்கழகங்களுக்கு மாணவர்களை அனுமதிப்பதில்— அனைத்திலுமே இனவெறியைக் கடைப்பிடித்து, தமிழரை ஒதுக்கி, சிங்களவர்களுக்கு சார்பாக இயங்கி வருகிறது.

ஆனால் தந்தை செல்வா—தமிழினத்தின் அரசியல் உரிமைகளை மீட்பதில் முன்னின்று போராடிய போதிலும் — தன்னுடைய நிர்வாகத்திலுள்ள சுதந்திரன் நிறுவனத்தில் வேலை வழங்கும் போது எவ்வித இனப் பாரபட்சமும் காட்டியதில்லை—தமிழனுக்கு மட்டுமே வேலையென்று கூறி ஏனையோருக்கு கதவடைச்சதில்லை. அப்படி சாத்தியிருந்தால், ஏழைச் சிங்களத் தொழிலாளர்களும் ஏழை முஸ்லிம் தொழிலாளர்களும் இன்று சுதந்திரனில் வேலை செய்து கொண்டிருக்கமுடியாது! இவ்வளவு பெருந்தன்மை கொண்டவரைத்தான் வகுப்புவாதியென்று தூற்றுகிறார்கள்— இவர்கள் வகுப்புவாதக்குட்டையையே எப்போதும் கலக்கி அதில் மீன் பிடித்துக் கொண்டிருப்போர்!

தந்தைசெல்வா அவர்கள் சுதந்திரன் பத்திரிகையை வெளியிடும் பொறுப்பிலிருந்து ஏப்ரல் இறுதியுடன் தம்மை விடுவித்துக்கொள்ள முடிவுசெய்தார் என்றால், அவர் தொழிலாளர்களுக்கு கொடுத்த கடிதத்தில் கூறப்பட்டிருந்ததுபோல உண்மையி

(9-ம் பக்கம் பார்க்க)

## ஏடா தமிழா, எடுடா சபதம்

(9-ம் பக்கத் தொடர்ச்சி)

கோடியர் நீர்மை போல் முறைமுறை
ஆடுநர் கழியும் இவ்வுலகத்து'' என்றே
பாடிய புலவர் முதுகண்(ண)சாத்தன்.

### பாடுநர்

பாணர் பொருநர் கூத்தர் நல்இசை
வாணர் என்றே நாட்டின் தலைவன்
ஆனை குதிரை அணிமணி போன்று
ஆயிரம் பரிசுகள் அள்ளித் தருவான்.

ஃ ஃ ஃ

### கொல்லர்

கொல்லன் எங்கே இலக்கியத்தில்
கூறென்று கேட்பவர்க்கு — பொற்
கொல்லனையே காட்டிடலாம் சிலம்பு நூலில்!
"வேல்வடித்துக் கொடுத்தல் கொல்லர்க்குக்கடனே"
— என, வீரப்
பால் வடித்துக் கொடுக்கும் புற நூல் பகரும்.

ஃ ஃ ஃ

### படைஞர்

வில்லெடுத்து எய்த கணை
வீழ்த்தியது வேழத்தை — நில்லாது;
பொல்லாத புலியொன்றைத் தீர்த்து —
புள்ளிமான் பன்றியினைச் சாய்த்து —
புற்றுக்குள் உடும்பினையே தாக்கும் —
புதுமைதனைப் பழமையிலே கண்டோம்.
"வேழம் வீழ்த்த விழுத் தொடைப் பகழி
பேழ் வாய் உழுவையைப் பெரும்பிறி துறீஇப்
புழற்றலைப் புகழ்க்கலை யுருட்டி உற்றலைக்
கேழற் பன்றி வீழ அயலது
ஆழற் புற்றத் துடும்பிற் செற்றும்
வல் வில் வேட்டம் வலம்படுத் திருந்தோன்''

என,
வில் வல்லோன் ஓரி தனை ஒரு
சொல் வல்லோன வன்பரண
வாழ்த்தியதே இந்தப் பாடல்,

ஃ ஃ ஃ

வந்தவரை வரவேற்று நொந்தவரைக் காப்பாற்றி
சந்தமிகு தமிழ்வாழப் பறம்பு நாட்டைச்
சொந்தமுடனே ஆண்டிருந்த பாரிவேளின்
அந்தமிகு திருவிழாவில் ஆணையிட்டுச் சொல்கின்றேன்
அனைவருமே சபதமேற்போம் —
பகை வயிற நெஞ்சுடனே குளுரைப்போம்.
பழந்தமிழர் மரபு காப்போம் —
பகைப்புலத்தை இன்றே சாய்ப்போம்.
பண்டு தொட்டு வாழ்ந்த இனம் — மாய்வதா?
ஒண்ட வந்த பேய்கள் குலம் — பாய்வதா?
நாம் மாய்வதா?
வண்டு நிகர் கூந்தல் மாதர்
பெண்டு பிள்ளை தாய்கள் குலம் — கோழையா?
செண்டு கொண்டு செருமுனையில் — வெற்றி
கண்ட வீரர் எல்லாம் — மோழையா?
பண்டு தொட்டு வாழ்ந்த இனம் — மாய்வதா?
ஒண்ட வந்த பேய்கள் குலம் — பாய்வதா?
நாம் மாய்வதா?
கண்ணகியின் வழியில் வந்த கற்பரசி வீழ்வதாம் —
கருணையும் காதலித்த பாஞ்சாலி வாழ்வதாம்.
கரிகால் வளவனைக் கொல்வதாம் — ஒரு
கருங்காலி மனிதன் வெல்வதாம்!
கடமை தோற்பதாம் —
மடமை வெல்வதாம் —
கழகம் அழிவதாம் —
கலகம் வளர்வதாம் —
ஏடா தமிழா எடுடா சபதம்!
காடோ மேடோ நடந்திடு கடுகி,
வீடோ நாடோ விளக்கிடு விரைவில்!
ஆடோ மாடோ அறிவிலா இனமோ?
கோடோ குன்றோ ஏற்றிடு கொடியை!
ஈடோ இணையோ எதிரிகள் உனக்கு
ஏடா தமிழா எடுடா சபதம்!

# ஏடா தமிழா, எடுடா சபதம்!



(பறம்பு மலையில் நடைபெற்ற பாரிவிழாக் கவியரங்கிற்குத் தலைமை வகித்த தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அங்கு பாடிய தலைமைக் கவிதை இது.)

வணக்கம் —

வாஞ்சைமிகு அமைச்சருக்கும்
வந்திருக்கும் பெரியோர்க்கும் வணக்கம்.
வருடந் தவறினும் பாரியின் புகழ்ப் பாதம்
வருடத் தவருமல் வந்திருக்கும் புலவர்க்கும் வணக்கம்.

வாரி வழங்கும் மன்னன் பாரி - மனம்
சொன்னதைக் கொடுக்கும் தென்புல வள்ளல் -
சுந்தரத் திருநாள் சுவைத் தமிழ் மணக்க
சொக்கர் பக்தர் தவத்திரு அடியார்
அழைப்பினை ஏற்று அனைவரும் வந்தோம் -

உட்பகையால் உயிரிழந்தான் பாரி மன்னன்
அப்பகையால் அழிவதெனில் எனக்கும் சுகமே -
உள்ளிருந்தே கொல்லும் பிணியாய்
உடனிருந்தே கொல்லும் அணிகள்
எனக்கென்றே வாய்த்த பெருமை - பாரி
தனக்கென்றே கொண்ட பெருமை.

பாடிட வந்த பாவலர் குழுவே! தமிழ்
பருகிட வந்த என்னுடை வணக்கம்!

ஆடுநர் பாடுநர் அழகாம் ஓவியர்
அஞ்சாப் படைஞர் அன்புடை நெய்வோர்
அமைதி உழவர் அணிசேர்க் கொல்லர்
அத்தனைபேரும் சொற் சித்திரமாவர் -
அள்ளித் தருகக் கவியாம் அமுதை!

ஆகாயக் கானகத்தில் அன்னப் படகொன்று
அடியில்லா மரம்போல ஆறுதலை நாகமுடன்
வேதாக மங்கள் விறலிவிடு தூதுக்கள்
பேஷான சுண்டல் வடை பாயாசம்
கும்பகோணம் மாமாங்கம் குட முழுக்கு
கூளப்ப நாயக்கன் காதல் குமரேச சதகம் துள்ள
குங்குமத்தைப் பொட்டிட்டு கூந்தலையும் சிறைப்படுத்தி
சந்தனத்துப் பிணவாடை சவ்வாதுப் பாலாடை
சலசலக்கும் தென்றலிலே 'ஜன்னல் கண்' கொண்டிங்கே
பளபளக்கும் வழிகாட்டிப் பாவை நீ கண்வளராய்!

புலவர்களே!

புரிகிறதா கவிதை? இல்லை புலன் ஐந்தும் எரிகிறதா?
புரட்சிக் கவிதை எனப் புரியாமல் எழுதுகின்ற
வறட்சிச் சிறுவர்களின் பாட்டுக்கோர் எடுத்துக்காட்டு
இவரெல்லாம் கவிஞரெனத் திரிகின்ற தமிழ் நிலத்தில் -
குட்டிச்
சுவரெல்லாம் தமிழ்த் தலைமை கோருவதும் நியாயந்
தானே!
நான்குபுறம் சட்டமில்லா சித்திரம் போல்
நான் எழுதும் பாட்டுக்கு சீர்தளைகள் இருப்பதில்லை
அதனாலே
சித்திரமும் இல்லை என்று செப்புவரோ தமிழ் நாட்டார்?
சிந்தை அணு ஒவ்வொன்றும் சிலிர்க்கின்ற உணர்வுகளே
என் பாட்டு
செந்தமிழர் நலமிசைக்க சீர்திருத்த முறைகூற
எழுந்த பாட்டு
மரபொழுக்கம், மானம், வீரம், ஈகை, இவை மலிந்த
திருநாட்டுச் சிறப்புயர்த்தப் பாடல் வேண்டும்.
மாற்றாரும் நம்மவர் போல் நடித்துத் தாக்கிக்
காற்றாடிக் கொள்கையினால் கவரும் முயற்சி
தோற்றோடிப் போவதற்கு பாடல் வேண்டும்.
ஏழைகளின் முதுகெலும்பில் ஏணைகட்டி
ஏற்றமுற்றோர் துயில்கொள்ளல் — பார்த்திருத்தல்
கோழைகளின் செயல் என்று பாடல் வேண்டும்.
சாதி மத பேதங்களை மேடையிலே சாடி
மீதிநேரம் வீட்டுக்குள் அவைகளையே நாடும்
பாதிமனப் பகுத்தறிவு வாதிகளைத் தேடி
பக்குவமாய் எச்சரிக்கப் பாடல் வேண்டும்!

உறவுக்குக் கை கொடுக்கப் பாட்டு -
உரிமைக்குக் குரல் கொடுக்கப் பாட்டு -
உத்தமர்க்குப் புகழ் பாடப் பட்டு -
ஊருக்கு நலம் பொழியப் பாட்டு -
தமிழ் வாழப் பாட்டு - தமிழர்
கொடி வாழப் பாட்டு -
பார் செழிக்கப் பாட்டு - இன்று
பாரி விழாப் பாட்டு!

மாண்டுவிட்டான் என்றிருந்தோம் மன்னன் பாரி -
ஆண்டு தோறும் அடிகளார் தான் எழுப்புகின்றார் அவனை -
தோண்டிவிட்டால் கிணற்றுக்குள் தண்ணீர் வரும்
தூண்டி விட்டால் மீன்கள் வரும் குளத்திருந்து
வேண்டிவிட்டால் வெகுமதிகள் நிறைய வரும் -
பாரி நாட்டில்
மீண்டுவிட்டான் இன்றவனும் - மழை பொழியும்
பொன்னுக!

ஃ ஃ ஃ

மொழி வளர்த்தல், கலை வளர்த்தல் - உலகில்
மூத்த தமிழ்க் குலம் வளர்த்தல் -
விழிமலரை இமை இலைகள் காப்பது போல்,
வேந்தர்க்கு அந்நாளில் கடமைகளாம்!
பழியுரைத்து இந்நாளில் பாம்புகளாய்க் கடிக்கின்றார்
பசுந்தமிழ் வளர்க்கப் பணிகளை நாம் மேற்கொண்டால்!
தேரை நிறுத்தி கொடிகாத்த பாரி நாளில் கேட்கின்றேன்,
தேரைகளா நாம், பாம்புகட்குத் தீனியாக? இல்லை, இல்லை;
கிரிகளாய் மாறிடுவோம் - கிளர்ந்தெழுவோம் -
கீரைத் தண்டுகள் போல் கிழித்தெறிவோம் பாம்பினத்தை!
''கிளம்பிற்றுக் காண் தமிழ்ச் சிங்கக் கூட்டம் -
கிழித்தெறியத்தேடுது காண்பகைக் கூட்டத்தை'' எனப்
பாவேந்தன் பாடியது மறந்தா போகும்?
பாவிநீ மறந்தாலே உன் மானம் போகும்!

ஃ ஃ ஃ

தமிழ் விழா எடுத்தனர் -
தகத்தகாயப் பொன்விழா எடுத்தனர் -
தளதள வெனக் கிழவர்கள் வந்தனர் -
தந்தச் சிலையென மகளிர் கூடினர் -
திண்தோள் இளைஞர் திரளாய்க் குழுமினர் -
தெவிட்டா அமுத மழலைகள் திரண்டனர் -
அணிகள் மணிகள் கண்ணைப் பறித்தன
ஆட்டம் பாட்டம் அகமிக மயக்கின
கோயில் யானையின் கோலமே கோலம்
கோமளக் குயிலின் கீதமே கீதம்
கொடிகள், சுருட்டிகள், கோபுரப் பந்தல்
கொள்ளை யழகு! கொள்ளையழகு!
விழாப் பயன் இதுவே எனிலோ, எந்தன் வேதனை மிகுமே!
அழாக் குறையாக அன்னைத் தமிழாள் இருப்பதை எண்ணி

இனி

எழாத் தமிழரும் எழுந்திடல் வேண்டும் - அன்றே
விழாப் பயனைச் சுமந்திடும் தென்றல்!

கபிலர் என்றொரு புலவர் உண்டு - அவர்
கவிகள் அனைத்தும் தேன் கனி கற்கண்டு.
அகம் புறம் என்ற தொகுப்புகள் உண்டு - அவை
இக பரம் பற்றிய பாடல்களன்று!
கன்னியர் ஆடவர் காதலோர் புறம் - காளையர்
களிற்றை அடக்கிடுமாற்றல் ஓர் புறம்.
எண்ணியர் திண்ணியர் மன்னர் வாழ்ந்தனர் -
கண்ணியம் கடமை போற்றி ஆண்டனர்.
வேல்கொண்டு மண்காத்த வேந்தர்கள் கொற்றம்
விரைந்து தமிழ்கொண்டு கவிபாடும் புலவர்கள் சுற்றம் -

இப்படி

எட்டாக் கனியாய் இலக்கிய நூல்களில்
இருக்கும் சிறப்பை எடுத்து விளக்க
எளிமையில் கவிதைகள் இயற்றல் நன்று
எந்தன் பணியும் இவற்றில் ஒன்று -
மறைந்த தமிழரின் மறையாச் சரிதம்
மங்கா விளக்கென எங்கும் திகழ
விரைந்து செயல்கள் விளைப்போம் வாரீர் -

கரிகாற் சோழன் கட்டிய புகாரும்
கடல்வாய் வீழ்ந்து அழிந்ததை அறிவோம்
கட்டியே முடிப்போம் புதிய புகார் என
தட்டிய தோளுடன் தலைநிமிர்ந் தெழுந்தோம்
பாஞ்சைப் பதியின் பாயும் புலியாம்
பரங்கியர்ப் பகையன் பாண்டியன் பொம்மன்
மண்ணொடு கலந்த மறவன் கோட்டை
மறுஉரு கொண்டு மாண்புகளுடனே
மரபினைச் சொல்ல எழுவது காணீர்!
வள்ளுவர் வாழ்ந்த வளமிகு மயிலை
வண்ணக் கோயில் பழுதுறு நிலையை
உள்ளவும் இயலா உணர்வுடன் தடுத்து -
செந்நாப் போதார் சிறப்பினைச் சொல்ல
சென்னையில் கோட்டம் திருப்பணி தொடங்கும்
சங்கப் புலவர்கள் தங்கச் செய்யுள்
எங்கும் ஒளிவிட ஏற்றோம் தொண்டு.

இனி

எழாத் தமிழரும் எழுந்திடல் வேண்டும் - அன்றே
விழாப் பயனைச் சுமந்திடும் தென்றல்!

ஃ ஃ ஃ

மன்னவரும் புலவருந்தான் இலக்கியத்தில் இருக்கின்றார்
மற்றெவரும் இல்லையென்று எண்ணாதீர்
தென்னவர் தம் திருநாட்டு இலக்கியத்தில்
திறன்மலி உழவர், தீதிலா ஓவியர்,
உரமலி படைஞர், ஒப்பிலா நெய்வோர்
ஆடுநர், பாடுநர்; அழியாக் கொல்லர்
ஆக்கும் தொழில்கள் ஆற்றினர் அன்று

## உழவர்

''பண்ணியும் அட்டியும், பசும்பதம் கொடுத்தும்
புண்ணியம் முட்டாத் தண்ணிழல் வாழ்க்கை
கெடுமேழி நசை உழவர்.''
எனப்பாடும்; இலக்கிய ஏடும்!

## நெய்வோர்

ஆற்றுப்படையின் அழகுறு தமிழும்
நூற்று வாழ்வோர் மேன்மையைப் புகழும் -
''நோக்கு நுழைகல்லா நுண்மைய பூக்கனித்து
அரவுரியன்ன அறுவை!!

## ஓவியர்:

ஓவியர் புகழோ உச்சியில் நின்றது
''ஓவத் தன்ன இடனுடை வரைப்பு''
சித்திரம் பற்றிய முத்திரைப் பாட்டில்
கைத்திறம் வியந்து கவிஞர் பெருமான்
போற்றிய சொற்கள் புறப்பாட்டுடைத்து

## ஆடுநர்

கோட்டமும் கொற்றமும் குடையுங் கொண்டான்
ஆட்டன் அத்தி என்பான் வாழ்ந்தான்
இன்னும், ''விழவிற்

(8-ம் பக்கம் பார்க்க)

## ஜனவேகத்தின்...

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

யிலே நட்டமே காரணமாகும்.

அவர் உழைத்துக்கொண்டிருந்த நாட்களில் தான்சட்டத்தொழிலில் ஈட்டிய பணத்தை வாரி இறைத்து சுதந்திரன் நட்டத்தை ஈடு செய்துகொண்டிருந்தார்; இன்றோ தன்னுடைய மூப்புக் காரணமாக சட்டத்தொழிலையே விட்டுவிட்டார். இதனால் சுதந்திரனின் பொருளாதார, நட்டத்தை ஈடு செய்யக் கூடிய நிலையில் அவர் இன்று இருக்கவில்லை.

சுதந்திரன் நட்டத்தின் காரணமாக கஷ்டம் அடைய நேர்டுகிறது என்றால் அதற்கு அதற்கு அரசுபோடும் திடீர் சட்டங்களும் ஒரு காரணம்; பத்திரிகை அச்சிடும் காகிதத்தின் விலை இந்த அரசு வந்த பின்னர் இரண்டு மடங்கு, மூன்று மடங்காக உயர்ந்துவிட்டது. வாழ்க்கைச் செலவு, விலைவாசி உயர்வு காரணமாக தொழிலாளர் சம்பளமும் உயர்ந்துவிட்டது. தொழில்துறைகளில் அரசு பின்பற்றும் கொள்கை காரணமாக பத்திரிகைகளுக்கு விளம்பரம் கொடுக்கும் தொழில் அதிபர்களும் இன்று வெகுவாகக் குறைந்துவிட்டனர்!

நாம் இதை எழுதிக்கொண்டிருக்கும் போதே தற்போது சுதந்திரன் அச்சிடும் காகிதத்தின் விலை மேலும் உயர்த்தப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. 'நியூஸ் பிரிண்ட்' கைவசம் இல்லையென்றுகூறி 'வெள்ளை அச்சடித்தாள்' (White Printing Paper) ஒரு ரீம் ரூபா 59/95 வீதம் தந்து வந்த கிழக்கிலங்கைக் கடதாசி ஆலைக் கூட்டுத்தாபனம் இரவோடிரவாக அதன் விலையை ரீம் ஒன்றுக்கு ரூபா 110/- ஆக உயர்த்தியிருக்கிறது; இந்நிலையில் பத்திரிகை நடத்துபவர்கள் எவ்வளவு தூரம் கஷ்டமடைய நேரிடும் என்பதை பத்திரிகைக்காரர்களான ஜனவேகத்தினர் அறியாதிருப்பது வித்தையல்ல!

ஏனெனில் அவர்களுக்குத்தான் — தான் விலை உயர்வை ஈடுசெய்ய அரசாங்கக் கூட்டுத்தாபன விளம்பரங்கள் தாராளமாகக் கிடைக்கின்றனவே! ஆனால் சுதந்திரனுக்கோ — அதன் அரசியல் கொள்கை காரணமாக அரசாங்க, கூட்டுத்தாபன விளம்பரங்கள் மறுக்கப்படுகின்றன! இவர்கள் தான் ஜனநாயகத்தைக் காப்பாற்றப்போவதாகவும் வாய்ப்பறை அடிக்கிறார்கள்!

இவற்றின் காரணமாக சுதந்திரன் வெளியிடுவதை தன்னுடைய பொறுப்பிலிருந்து நீக்கிவிட தந்தை செலவா முடிவுசெய்திருந்தாரே தவிர — 'ஜனவேகம்' குறிப்பிட்டதுபோல் தொழிலாளர்கள் 'போனஸ்' கேட்டார்கள் என்பதற்காக அல்ல! அப்படி சுதந்திரன் தொழிலாளர்கள் யாரும் 'போனஸ்' கேட்கவுமில்லை!

எனினும் — பத்திரிகையை நிறுத்திவிடாதீர்கள் என்று நாள்தோறும் வந்து குவிந்த சுதந்திரன் வாசகர்களின் கண்ணீர்க் கடிதங்களாலும் — தமிழ் மக்கள் காட்டிய உற்சாகத்தாலும் — இன்றைய அரசு தொழிலாளர் மீது சுமத்தியிருக்கும் பயங்கர வாழ்க்கைச் சுமையின் காரணமாக — தங்கள் உயிர்ப்பிழைப்புக்காக சுதந்திரனையே நம்பியிருக்கும் ஏழைத் தொழிலாளர்கள் வேலை இழந்து கண்ணீர் வடிக்கும் நிலைமை ஏற்படுவதைத் தவிர்ப்பதற்காகவும் — சுதந்திரனை அடுத்த மூன்று மாதங்களுக்குள் நட்டமின்றி நடத்துவதற்கு தாங்கள் பூரண ஒத்துழைப்பும் ஆதரவும் தருவதாக தொழிலாளர்களின் சார்பில் அவர்களது

(4-ம் பக்கம் பார்க்க)

தலைமைத் தபால் நிலையத்தில் செய்திப் பத்திரிகையாகப் பதிவுசெய்யப்பட்டது.


4-வது ஜனத்திரள் வாரம்

கெப்பிட்டல்-பிளாசா (கொழும்பு) (வெள்ளவத்தை)

வெலிங்டன் (யாழ் நகர்)

திரைகளில்

எம்.ஜி.ஆர், ஜெயலலிதா,

என். எம். நம்பியார்,

எஸ். ஏ. அசோகன்,

நாகேஷ், மனோரமா,

—நடித்த—



ராமன் தேடிய சீதை

(ஈஸ்மன் கலர்)

11வது வாரம்

கிங்ஸ்லி

லிடோ (யாழ்நகர்)

முத்துராமன், ஜெயலலிதா, நடித்தது.

சூரிய காந்தி

5-வதுவாரம் செல்லமகால் (கொட்டாஞ்சேனை)

வின்சர் (யாழ் நகர்)

புரட்சி நடிகர் எம். ஜி. ஆர், ஜெயலலிதா

மனோகர், முத்தையா, நம்பியார், நாகேஷ்

மனோரமா, ராமசாமி, கீதாஞ்சலி, பாரதி

— நடித்த —

அன்னமிட்ட கை

கெயிட்டி திரையில்

காண்பிக்கப்படுகிறது

சிவாஜி கணேசன், சரோஜாதேவி

நடித்த

கல்யாணியின் கணவன்

(புத்தம் புதிய கொப்பி)

6-வது வெற்றி வாரம்

சென்ரல் மருதானை 2,6,9-30 ராணி யாழ் நகர் 10.30,2 30,6 30,9.30

(சனி, ஞாயிறு காலை 10 மணிக்கும்)

இரத்த பாசம் கொண்ட நான்கு சகோதரர்களைப் பற்றிய உள்ளத்தைத் தொடும் உணர்ச்சிபூர்வமான கதை. எங்கும் எல்லோரிடத்தும் வாழ்க்கையில் நடக்கும் சம்பவங்களைப் பின்னணியாகக் கொண்ட குடும்பக் கதை.

இசை, கதை, நகைச்சுவை அனைத்தும் நிறைந்த அருமையான படம்

ஜெய்சங்கர், ஏ. வி. எம். ராஜன், பிரமீளா,

தேவிகா, சுந்தரராஜன், சோ, மனோரமா, நிர்மலா நடிக்கும்

ஜெயந்தி பிலிம்ஸ்

அன்புச்சகோதரர்கள்

(இலவச பாஸ்கள் ரத்து)


## என்னவளே....! — ரத்னா சுப்பிரமணியம்

நானுனை என்றோ எங்கோ
　நாளெலாம் கண்டு உள்ளத்
தேனினைத் திருந்தேன் இன்றத்
　திருவிடம் மறந்தேன் ஆனல்
மானிலே மருட்சி தன்னை
　மயிலிலே அழகை, ஆழி
மீனிலே கண்ணைக் கண்டேன்
　மீண்டும்நான் நினைவு கொண்டேன்!

கானலை நீரே என்றும்
　கண்டதே கோலம் என்றும்
தானலைந் தழிந்து போகும்
　தற்காலப் பெண்கள் உள்ளே
நானலைந் துன்னைக் கண்டேன்
　நன்முத்தென் றுறுதி கொண்டேன்
தேனலை வீசச் செய்யும்
　தென்றலே நீதான் பெண்ணே!

தேரிலே சக்தி வந்து
　திருவருள் செய்யும் நல்ல
ஊரிலே தோன்றி என்றன்
　உளத்தினுட்புகுந்து
தேரிலே மட்டு மின்றி
　நினைவிலும் ஆளு முன்றன்
பேரிலே கொண்ட அன்பு
　பிழையதோ சொல்வா யின்று!

காவிலே அழகை மாந்திக்
　களிப்புறும் ஊமை உள்ளம்
நாவிலே வார்த்தை யின்றி
　நயங்கெடுத் துளறல் போலே
பாவிலே பாடு பட்டும்
　பாதியும் சொன்னே னில்லை
தாவிலே இதனைச் சொல்வேன்
　'தமிழென' வாடி பெண்ணே!!

சுதந்திரன் பத்திரிகை இலேசன் நியூஸ்பேப்பர்ஸ் லிமிடெட் ஸ்தாபனத்தாரால் கொழும்பு பண்டாரநாயக்கா மாவத்தை 194 ஏ. இலக்கத்தில் 1974ம் வருடம் மே மாதம் 26-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டுள்ளது.